Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 168

வெள்ளிக்கிழமை
13 மே 2022

சித்திரை 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 13
முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் எதிர்வரும் 18ஆம் திகதி முன்னெடுக்கப்பட

15 >

# 6ஆவது தடவையாக பிரதமரானார் ரணில்

## நேற்று மாலை பதவிப் பிரமாணம்



கொழும்பு, மே 13
இலங்கையின் 26ஆவது பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை 6.30 மணியளவில் பதவியேற்றார். ஜனாதிபதி செயலகத்தில் குறைந்தளவானோரின் பங்கேற்புடன் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

15 >

## பிரதமராக ரணிலுக்கு உரிமையில்லை!

கொழும்பு, மே 13
இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமை

15 >

## தப்பி ஓடமாட்டோம்!

நாமல் தெரிவிப்பு

கொழும்பு, மே 13
எனக்கோ, எனது தந்தைக்கோ நாட்டை விட்டுத்

15 >

## பிரதமரின் செயலாளர் ஏக்கநாயக்க

கொழும்பு, மே 13
புதிய பிரதமரான ரணிலின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற விசேட நிர்வாக அதிகாரி சமன் ஏக்கநாயக்க கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

15 >



## புதிய அமைச்சரவை இன்று முடிவாகும்!

கொழும்பு, மே 13
இடைக்கால அரசாங்கத்தின்பிரதமராகரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய

15 >

## ராஜபக்சக்களின் காவலரே ரணில்!

ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு

கொழும்பு, மே 13
ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ராஜபக்ச குடும்பத்தின் பாதுகாவலராகவே இருந்து வருகின்றார். நாட்டின் நெருக்கடிகளைத் தீர்க்கும் என்று ரணில்

15 >

## "கோத்தா கோ கமவில்" கைவைக்க மாட்டோம்!

பதவியேற்ற பின்னர் ரணில் உறுதி

கொழும்பு, மே 13
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கொழும்பு

15 >

## காலை தளர்த்தப்பட்டு பிற்பகல் மீள ஊரடங்கு

கொழும்பு, மே 13
நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குத்

13 >

## பொருத்தமற்றவர் ரணில்!

ஓமல்பே தேரர், மல்கம் ரஞ்சித் கொதிப்பு

கொழும்பு, மே 13
இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக ரணில் விக்கிரம சிங்க நியமிக்கப்பட்டமைக்கு ஓமல்பே சோபித தேரர் மற்றும் கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஓமல்பே சோபித தேரர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமனம் பெற பொருத்தமற்றவர் என்று தெரிவித்தார். இந்த நியமனம் அரசமைப்புக்கும், ஜனநாயகத்துக்கும் விரோதமான செயற்பாடா

13 >

## பிரதமரான ரணிலுக்கு மறைந்திருக்கும் மஹிந்த மறக்காமல் வாழ்த்தினார்!

கொழும்பு, மே 13
நாட்டின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னாள்பிரதமர் மஹிந்தராஜ

15 >

## தாய்ப்பால் புரையேறி 15 நாள் சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 13
தாய்ப்பால் புரையேறி 15 நாள்களேயான சிசு ஒன்று உயிரிழந்

13 >

## மஹிந்த உட்பட 17 பேரின் கடவுச்சீட்டுகள் முடக்கம்!

கொழும்பு, மே 13
முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் அமைச்சர்களான நாமல் ராஜபக்ச, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட 17 பேருக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் வெளிநாட்டுப் பயணத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. "மைனா கோ கம" மற்றும் "கோத்தா கோ கம" போராட்டக்காரர்கள் மீது மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களால் தாக்குதல் நடத்தப்பட்

15 >



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் புதிய பிரதமராகப் பதவியேற்றதை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு வெடி கொளுத்திக் கொண்டாடினர். (6-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோத்தாவுக்கு எதிரான

# அவநம்பிக்கை பிரேரணை: 17ஆம் திகதி விவாதம்

## அவசரகாலச் சட்டம் தொடர்பில் எதுவுமில்லை

கொழும்பு, மே 13

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவநம்பிக்கை பிரேரணை எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

கட்சித் தலைவர்கள் கூட்டம் நாடாளுமன்றத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கு நாடாளுமன்றத்தை 17ஆம் திகதிக்கு முன்னர் கூட்டவேண்டும் என்று சபாநாயகர், ஜனாதிபதியிடம் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அதுதொடர்பில் எதுவும் ஆராயப்படவில்லை என்பதுடன் முன்னர் ஒத்திவைத்ததற்கு அமைவாக எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தை கூட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் அன்று கூடும்போது முதல் நடவடிக்கையாக, பிரதிச் சபாநாயகர் தெரிவும், பின்னர் நிலையியல் கட்டளைகள் ஒத்திவைப்பும், அதையடுத்து ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானமும் விவாதிக்கப்பட்டு இறுதியில் வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை - கடந்த 6ஆம் திகதி ஜனாதிபதி அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியிருந்தார். அது பிரகடனப்படுத்தப்பட்டு 14 நாள்களுக்குள் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவேண்டும். அவ்வாறு நிறைவேற்றுவதன் ஊடாகவே ஒரு மாதக் காலத்துக்கு அவசரகால நிலைமையை நீடிக்கமுடியும்.

நாடாளுமன்றில் 14 நாள்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமாக இருந்தால், அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு 10 நாள்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆனால், நாடாளுமன்றம் 17ஆம் திகதி கூடுவதால், 10 நாள்கள் அவகாசத்தில் அவசரகாலச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான வாய்ப்பு இல்லாமற்போயுள்ளது. எனவே அவசரகாலச் சட்டம் காலாவதியான நிலையில் நாடாளுமன்றம் கூடும் அல்லது அதற்கு முன்னர் ஜனாதிபதி அவசரக் காலச்சட்டத்தை விலக்கிக் கொள்வார். (ஒ-5)



## எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் மீது தாக்குதல்!

### குளப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணம் - குளப்பிட்டிப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த ஐவர் கொண்ட குழு எரிபொருள் வழங்குமாறுகோரி அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இது தொடர்பில் முகாமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஐவர் அடங்கிய குழுவினர் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்து தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரினார்கள். எரிபொருள் இல்லை என்று அவர்களிடம் தெரிவித்தேன். இதையடுத்து அவர்கள் என் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று பாதிக்கப்பட்ட நபர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சி.சி.ரி.வி. பதிவுகளின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சந்தேகநபர்களில் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-125)

## வெசாக் கொண்டாட தயாராகும் கொழும்பு

கொழும்பு,மே 13

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளபோதும், தென்பகுதியில் வெசாக் பண்டிகையைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வெசாக் பண்டிகைக்காக வெசாக் பந்தல்கள் மற்றும் அலங்காரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பில் உள்ள பழமையான பந்தல்களில் ஒன்றான 'தெமட்டகொட தொரண' பந்தலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தெமட்டகொட மற்றும் பொரளைப் பகுதிகளில் வெசாக் அலங்காரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (க-இ)

## சுண்ணாம்புத் தண்ணீரால் பார்வை பறிபோகும் நிலை

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

கொழும்பு, மே 13

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் மேற்கு பகுதியில் உள்ள பலசரக்கு கடையின் பெண் முதலாளி ஒருவர் சுண்ணாம்புக் குவளையை சுத்தம்செய்து, வீதியில் ஊற்றியபோது, அந்தத் தண்ணீர் அந்தப் பகுதியால் சென்ற பெண்ணின் கண்ணில்பட்டு பார்வை பறிபோகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 43 வயதுடைய குறித்த பெண் இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார். குறித்த கடைக்காரரின் அசண்டையீனத்தால் தனக்கு 10 நாள்கள் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இன்னமும் பார்வை சீராகவில்லை என்றும் அந்தப் பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

## லசந்த படுகொலை; விசாரணை ஆரம்பம்

கொழும்பு,மே 13

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான சாட்சியங்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

நெதர்லாந்தின் ஹேக் நகரில் நிறுவப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயத்தில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க, 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி காலை தனது அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது அத்திட்டியப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)



### ஊரடங்கு நீக்கப்பட்டதும்

## எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் மக்கள்!

யாழ்ப்பாணம், மே 13

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதையடுத்து, நாடெங்கிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை நோக்கி நேற்று மக்கள் படையெடுக்க ஆரம்பித்தனர். வடமாகாணத்தின் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இந்த நிலையை அவதானிக்க முடிந்தது.

நேற்றுக்காலை 7 மணிக்குத் தளர்த்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் மீண்டும் பி.ப.2 மணிக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. குறுகிய அவகாசம் என்பதால் எரிபொருளுக்காக மக்கள் முண்டியடித்தனர். அதேவேளை, அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகள் 12 மணிவரை இயங்கிய நிலையில் அதிகளவான மக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. (ம-17.213)

## தமிழர் ஒன்றுபடும் காலம் இதுதான்!

### கஜேந்திரன் எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம், மே 13

சிங்கள பௌத்த பேரினவாதம் பலவீனம் அடைந்துள்ளது. தமிழ் மக்கள் தற்போது ஒன்றுபட வேண்டிய காலம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்னால் இனப்படுகொலைகளை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தலை ஆரம்பித்தபின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் பயணத்தில் உயிர்நீத்த ஆன்மாக்களினதும், மாவீரர்களினதும் தியாகங்கள் வீண்போகவில்லை என்பது இன்று தென்னிலங்கையில் நடைபெறுகின்ற சம்பவங்களின் மூலம் நம்பிக்கை கொள்ளக்கூடியதாகவுள்ளது.

எங்கள் மீது இனப்படுகொலையைச் செய்த அதே ராஜபக்ச, இன்று சொந்த மக்களாலேயே துரோகி என்றும் கள்ளன் என்றும் கொலைகாரன் என்றும் தூற்றப்பட்டு தூக்கி எறியப்பட்டுள்ளார். கோத்தாபய ராஜபக்சவும் விரைவில் வீட்டுக்குச் செல்லவேண்டும் என்பதே எமது விருப்பம். அவர் வீட்டுக்குச் செல்வது மட்டுமல்ல. அவர் மேற்கொண்ட இனப்படுகொலைக்காக சர்வதேச சட்டங்களின்முன் நிறுத்தப்பட்டு அவர் தண்டிக்கப்பட வேண்டும் என்பது தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. சிங்களப் பேரினவாதம் இப்போது பலமிழந்துள்ளது. தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டிய காலம் இதுதான் - என்றார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ நெருக்கடிகளைக் கருதி அரசியல் கைதிகளை விடுவிக்குக

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்து

**யாழ்ப்பாணம்,மே 13**

**நாட்டில் மருத்துவ நெருக்கடிகள் அதிகரித்துள்ளதால், சிறைகளிலுள்ள கைதிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகள் பனடோலைக்கூடப் பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளனர். எனவே அவர்களின் விடுதலை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவிக்கையில்,

பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிப்பை உணர ஆரம்பித்துள்ளனர்.

புதிய மகசின் சிறைச்சாலையில் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் பலரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மருத்துவ வசதியைப் பெறுவதற்கான மருந்துகள்கூட பெரும் தட்டுப்பாடாகவுள்ளன.

சாதாரணமான பனடோலைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. அரசியல் கைதிகளின் உறவினர்கள் இதனை எமக்குத் தெரியப்படுத்திக் கவலைப்பட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உதவி செய்ய முயற்சிக்கவேண்டும்.

அரசியல் கைதிகள் பலரும் தொற்றாநோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக இவ்வாறான நோய்களாலும் மருத்துவ ரீதியாகப் புறக்கணிக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகிறது. சம்பந்தப்பட்ட தரப்புகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (க-20)

---

### பொது நிர்வாக செயலாளராக மீண்டும் ரத்னசிறி நியமனம்

கொழும்பு,மே 13

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய ஜே.ஜே. ரத்னசிறி, மீண்டும் அதே அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய, மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தொடர்ந்து பேணுவதற்கு கடந்த 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

---

## ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணையுங்கள்

### சுதந்திர ஊடக இயக்கம் அழைப்பு

கொழும்பு,மே 13

மிருகத்தனமான ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனநாயக ஆட்சி முறையை மீள நிறுவுவதற்கு சிவில் சமூகமும், அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்க ஆதரவாளர்களால் 'கோத்தா கோ கம' போராட்ட களத்துக்குள் புகுந்து மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலானது மனிதகுலத்துக்கு எதிராக இடம்பெற்ற கொடூர குற்றமாகும். இவ்வாறானதொரு பேரழிவைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளாத அரசாங்கத்தையும், பொலிஸாரையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சம்பவத்தில் ஊடகவியலாளர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனவே சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து குடிமக்களும் சர்வதேச மனித உரிமைப் பாதுகாவலர்களும் இந்தக் கொடூரமான குற்றத்துக்கு எதிராக அணிதிரள வேண்டும்.

அகிம்சை மற்றும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாத்துப் போராட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (க-இ)

---

### இந்தியக் கடற்படையால் கண்காணிப்புத் தீவிரம்

யாழ்ப்பாணம், மே 13

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வடக்கு பகுதியிலிருந்து இந்தியாவுக்குத் தப்பிச் செல்வோரைத் தடுக்கும் முகமாக இந்தியக் கடலோரக் கடற்படையினரால் கண்காணிப்புப் பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கென 16 படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுவரையில் வடக்கிலிருந்து 84 பேர் ஏற்கனவே இந்தியாவுக்குப் புகலிடம் கோரி சென்றுள்ளனர் எனவும் அதில் இருவர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இந்திய சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

---

## அத்தியாவசிய சேவைகளுக்கு ஆணையாளர்கள் நியமனம்

கொழும்பு,மே 13

அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் மற்றும் தொடர்ந்து முன்னெடுத்தல் தொடர்பான சகல செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் இரண்டு மேலதிக ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரப்பிரதானி கே.டி. எஸ்.ருவன் சந்திர அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாகவும், மேலதிக ஆணையாளர்களாக விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளரான ரோஹன புஷ்பகுமார மற்றும் தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவற்றின் ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக 25 மாவட்டங்களைச் சேர்ந்த செயலர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்த நியமனங்களை வழங்கியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

---




**ரணில் பிரதமரானவுடன் இலங்கையில பாலாறும், தேனாறும் ஓடப்போகுது எண்டோ இல்லாட்டி எல்லாப் பிரச்சினையும் தீர்ந்தும் எண்டோ நினைச்சா அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேற ஒண்டும் இருக்காது. உண்மையில இனித்தான் சிக்கல் கூடப்போகுது. ரணிலுக்கு மஹிந்தவை விடவும் சர்வதேசத்தில செல்வாக்கு கூடத்தான். அதாலதான் அவர் பிரதமரான உடனேயே அமெரிக்காவும், இந்தியாவும் விழுந்தடிச்சு வாழ்த்துச் சொன்னவை. ஆனால் சர்வதேசத்தில எவ்வளவுக்கு செல்வாக்கு இருக்கோ அதேயளவுக்கு இலங்கையில ரணில் எண்டாலே அரசியல்வாதியள் தெறிச்சு ஓடுவினம். அந்தளவுக்கு தன்ர சுயநலத்துக்காக ஆரையும் பலிகுடுக்கத் தயங்காத ஆள்தான் ரணில்.**

**அதோட எல்லாரையும் பிரிச்சு, அதில குளிர்காயுறது ரணிலுக்கு கைவந்த கலை. இவ்வளவுநாளும் சஜித்தோட ஒட்டிக்கொண்டிருந்த ஹரீன் பெர்னாண்டோவை தான் பதவியேற்க முதலே ஆசை காட்டி, தன்ர பக்கம் இழுத்ததோட பழையபடி பிரித்தாளும் 'கேமை' ரணில் வெற்றிகரமா தொடங்கிட்டார். அதோட எல்லாரும் எதிர்பார்த்த மாதிரி இண்டைக்கு வெள்ளிக்கிழமை புது அமைச்சரவை பதவியேற்காது எண்டும் ரணில் சொல்லியிருக்கிறார். அப்பிடியெண்டால் ரணில் வைச்ச பொறியில இன்னும் பலியாடுகள் சிக்கேலை எண்டு தான் அர்த்தம். அப்பிடிச் சிக்கியிருந்தால் இண்டைக்கு கட்டாயம் அமைச்சரவை பதவியேற்றிருக்கும். அது லேட்டாகிறதால ஆர் ஆருக்கு ரணில் பொறி வைச்சிருக்கிறாரோ எண்ட கலக்கம் எல்லாக் கட்சிகளின்ர தலைவர்மாருக்கும் இப்ப வந்திருக்கும்.**

**நேற்றுவரைக்கும் மஹிந்தவுக்கு பிற்பாட்டு பாடிக்கொண்டிருந்த கனவு பாழானவரும், வீணைக்காரரும் இப்ப திடீரெண்டு 'ரணில் தான் பொருத்தமான தலைவர்' எண்டு உடனேயே பிளேட்டை மாத்திட்டினம். எல்லாக் கட்சிகளையும் சேர்த்துத்தான் அமைச்சரவை ரணில் தெரிவு செய்யப்போறார் எண்டதால, அவரை இப்பிடி அட்வான்ஸா புகழ்ந்து வைச்சால், தங்களுக்கும் ஒரு அமைச்சுப் பதவி கிடைக்கலாம் எண்ட நப்பாசைதான் எல்லாத்துக்கும் காரணம். ஏனெண்டால் நல்லாட்சிக் காலத்தில ரணிலோட பாலும் தேனுமா இருந்த கூட்டமைப்பு , இந்தமுறை ரணிலின்ர நியமனத்தை எதிர்க்குது. அதால அவர் தலைமையில வரப்போற சர்வகட்சி அரசாங்கத்தில கூட்டமைப்பு பங்குபற்றாது. அதால தமிழ்த்தரப்பு எண்ட வகையில தங்களுக்கு ஏதும் அமைச்சுப் பதவி எலும்புத் துண்டுகள் கிடைக்கலாம் எண்டது இவையின்ர இப்போதைய கனவு. ஆனால் நேற்று வரைக்கும் இதே ரணிலை கண்டபடி பேசின ஆக்கள்தான் இவை ரண்டுபேரும். இனி எந்த முகத்தோட பதவி தாங்கோ எண்டு போகப்போகினம் எண்டதும் கேள்வியாத்தான் கிடக்குது.**

**வழக்கம்போல, ரணில் தன்ர அரசாங்கத்தில கூட்டமைப்புக்கு முக்கியமான அமைச்சு தாறன், வாங்கோ எண்டவராம். ஆனால் சனங்களுக்கு விருப்பமில்லாத உந்த அரசாங்கத்துல பதவியேற்ற பிறகு இப்ப இருக்கிற வீடும் இல்லாமல் போடுமெண்டு கனபேர் பயப்பிடுகினம். மே 9 ஆம் திகதி நடந்த சம்பவங்கள் அப்பிடி ஒரு பயத்தைக் கொண்டந்திட்டுது. கப்பு முக்கியமில்லை, வீடுதான் முக்கியம் பிகிலு!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழேந்திரனின் உருவப்படம் எரிப்பு

மட்டக்களப்பு, மே 13

முன்னாள் இராஜங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் உருவப்படம் தாங்கிய கட்டவுட்டுக்கு, இளைஞர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு கிரான் சந்தியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

குறித்த கட்டவுட் கும்புறுமூலை இராணுவச் சோதனைச் சாவடிக்குள் பொதுமக்களின் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

## இலங்கைக்கு வழங்குவதற்கான

# அரிசி கொள்வனவு அரசாணைக்கு தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்பு!

**சென்னை, மே 13**

**இலங்கைக்கு வழங்குவதற்காக அதிக விலைக்கு 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைக் கொள்முதல் செய்ய ஒப்புதல் அளித்த அரசாணைக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்து உத்தரவிட்டுள்ளது.**




சென்னை உயர் நீதிமன்றத்தில், தாக்கல் செய்த பொதுநல மனுவில், பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை மக்களுக்கு வழங்குவதற்காக 40 ஆயிரம் தொன் அரிசி கொள்முதல் செய்ய அரசு முடிவெடுத்துள்ளதாக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இந்த அரிசி அதிக விலைக்கு வாங்கப்படுகிறது. ஒரு கிலோ அரிசி 33 ரூபா 50 காசுகளுக்கு என்ற அடிப்படையில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைக் கொள்முதல் செய்ய 134 கோடி ரூபாவை ஒதுக்கி அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.

இந்திய உணவுக் கழகம் ஒரு கிலோ அரிசியை 20 ரூபா என்ற விலையில் விற்பனை செய்து வருகிறது. எனவே அங்கிருந்து அரிசி கொள்முதல் செய்யும் பட்சத்தில் 54 கோடி ரூபா மிச்சமாகும். இது தொடர்பாக சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பிய போது, இந்திய உணவுக் கழக அரிசி தரமற்றது எனவும், அரிசி கொள்முதல் செய்வது தொடர்பான தவறான தகவல்களைப் பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, அரிசி கொள்முதலுக்கு ஒப்புதல் அளித்து பிறப்பித்த அரசாணைக்கு தடை விதிக்க வேண்டுமென்று மனுதாரர் மனுவில் கோரியிருந்தார்.

எனினும் அரசாணைக்குத் தடைவிதிக்க நீதிமன்றம் மறுத்துள்ளது. (ம)

# இலங்கை நெருக்கடியால் இதயம் நொருங்கிவிட்டது

## மும்பையில் முகாமிட்டுள்ள பாடகி யொகானி தெரிவிப்பு



கொழும்பு, மே 13

இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலையைக் கண்டு என் இதயம் நொருங்கிவிட்டது. தாய் நாட்டு நலனுக்காக நான் தொடர்ந்து குரல் கொடுப்பேன்' என மும்பையில் உள்ள இலங்கை பாடகி யோகானி கூறியுள்ளார்.

'மெனிகே மஹே ஹித்தே' என்ற சிங்களப் பாடல் மூலம் புகழ்பெற்ற பாடகி யொகானி டி சில்வா தற்போது மும்பையில் இந்திய இசைக் கலைஞர்களுடன் பணியாற்றும் அவர், இலங்கை தொடர்பில் வழங்கியுள்ள செவ்வியில் கூறியதாவது:-

'பொருளாதார நெருக்கடி காரணமாக, இலங்கையில் நடக்கும் சம்பவங்களால் மனம் உடைந்து போயுள்ளேன். நெருக்கடியிலுள்ள இலங்கைக்கு நிதியுதவி மட்டும் அல்ல மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் கிடைப்பது முக்கியம். எனது நாட்டு மக்களுக்கு உதவ, எனது குரலைப் பயன்படுத்துவேன். நான் எனது நாட்டின்மீது அதிக பற்று வைத்துள்ளேன். நான் மும்பையில் இருந்தாலும், எனது குடும்பம், நண்பர்கள், என்னுடைய இசைக் குழுவினர் எல்லாம் இலங்கையில்தான் உள்ளனர். எனது தாய் நாட்டின் நலனுக்காக நான் தொடர்ந்து குரல் கொடுப்பேன்' -என்றார். (ம)

# இராணுவ ஆட்சிக்கு அடித்தளம் இடாதீர்

## வன்முறைகள் வேண்டாம் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 13

ஜனநாயக ரீதியிலான அமைதிவழிப் போராட்டத்தின் மத்தியில் திட்டமிடப்பட்ட ஒரு குழுவினரால் வன்முறைச் சம்பவங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தீ வைத்தல், கொள்ளை மற்றும் தனிப்பட்ட பழிவாங்கல்கள் ஆகியவை வன்முறைச் சம்பவங்களில் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

வன்முறைச் சம்பவங்கள் இராணுவ ஆட்சிக்கு வித்திடும். இராணுவ ஆட்சியை தோற்றுவிப்பது ஆட்சியாளரது தேவையாகவும் அமையலாம்.

ஆகவே பொதுமக்கள் வன்முறையில் ஈடுபடுவதை தவிர்த்து ஜனநாயக ரீதியிலான போராட்டங்களில் ஈடுபடுவது அவசியம் என்று தெரிவித்தார் அநுரகுமார திஸாநாயக்க. (ம)



# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பண்ணையும் தீக்கிரையானது!

கொழும்பு, மே 13

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் கால்நடைப் பண்ணை நேற்றுமுன்தினம் தீக்கிரையாக்கப்பட்டது. பண்ணையில் நின்ற ஆடுகள், பன்றிகள் மற்றும் முயல்களை வெளியே விடுவித்த பின்னர் போராட்டக்காரர்கள் பண்ணைக்குத் தீ வைத்துள்ளனர். 15 ஏக்கர் பரப்பளவில் இந்தப் பண்ணை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியாவுக்குள் அடைக்கலமாக ராஜபக்சக்களை அனுமதியோம்!

## சீமான் ஆவேசம்

**இரண்டு லட்சம் தமிழர்களைத் துடிக்கத் துடிக்கப் படுகொலை செய்த ராஜபக்சக்களுக்கு, மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு எந்தக் காரணம் கொண்டும் இந்தியாவின் எந்தமூலையிலும் அரசியல் அடைக்கலம் அளிக்க முன்வரக்கூடாது.**



கொழும்பு, மே 13

இரண்டு லட்சம் தமிழ் மக்களைக் கொன்றொழித்த ராஜபக்சக்கள், இந்தியாவுக்குள் அடைக்கலம் தேடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று தெரிவித்தார் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்ச சகோதரர்கள் இந்தியாவுக்கு அடைக்கலம் தேடி வரப்போவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன, இரண்டு லட்சம் தமிழர்களைத் துடிக்கத்துடிக்கப் படுகொலை செய்த ராஜபக்சக்களுக்கு, மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு எந்தக் காரணம் கொண்டும் இந்தியாவின் எந்தமூலையிலும் அரசியல் அடைக்கலம் அளிக்க முன்வரக்கூடாது.

சிங்கள இனவாதமும், பௌத்த மதவாதமும் இணைந்து தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மறுத்து, அதன் விடுதலையைத் தகர்த்து, அதற்காகப் போராடிய மக்களை இனப் படுகொலை செய்து அழித்தொழித்தது. மக்கள் நலனில் அக்கறை செலுத்தாமல மத, இன வெறியை மக்களுக்கு ஊட்டி, தமிழர்கள் மீதான வன்மத்தை வளர்த்து, அதன் மூலம் மாறிமாறி அரசாண்ட சிங்கள கொடுங்கோன்மை ஆட்சியாளர்களே இன்று இலங்கையில் நடக்கும் அத்தனை துயரங்களுக்கும் மூலகாரணம். அதற்குத் துணைபோன அப்பாவி சிங்கள மக்கள் ஐம்பதாண்டுகளாகத் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளை, பொருளாதார நெருக்கடிகளை இன்றைக்கு தாமும் அனுபவித்து வருகின்றனர்.

ஒரு நாட்டில் உண்ண உணவும், குடிக்க நல்ல தண்ணீரும் கிடைக்காதபோது அங்குப் புரட்சி ஏற்படுவதை ஒருபோதும் தடுக்கமுடியாது என்பதற்கு நிகழ்காலச் சாட்சியாக இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் அமைந்துள்ளன.

இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நிலை நாளை இந்தியாவுக்கும் ஏற்படலாம்.

எனவே இனியேனும் இந்திய பெருநாட்டை ஆளும் மோடி அரசு மதத்தின் மூலம் மக்களைத் தூண்டி பிரித்தாளும் சூழ்ச்சியையும், தேசிய இனங்களின் உரிமைகளைப் பறித்து அவர்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றைச் சிதைத்து இந்தியாவை ஒற்றையாட்சியின்கீழ் கொண்டுவரும் கொடுங்கோன்மையைக் கைவிட வேண்டும் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைந்து செயற்படத் தயார்

### ரணிலுக்கு தெரிவித்தது அமெ.

கொழும்பு, மே 13

இலங்கையின் புதிய பிரதமராக ரணில் விக்கிரம சிங்க நேற்று மாலை பதவியேற்றுள்ள நிலையில், அவருடன் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற சில நிமிடங்களில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன் றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக நாம் எதிர்பார்த்திருக்கின்றோம். அவர் பிரதமராக நிய மிக்கப்பட்டுள்ளமையும், அனைவரையும் உள்ளடக் கிய புதிய அரசாங்கத்தை உருவாக்குவதும் நெருக்க டிக்குத் தீர்வைக் காண்பதற்கான ஸ்திரத்தன்மையை ஊக்குவிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளாகும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களிலும், இலங்கையர்களுக்குத் தேவையான நீண்டகால தீர்வு களிலும் அர்த்தபூர்வமான முன்னேற்றங்களை நாம் ஊக்குவிக்கின்றோம் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தனது ருவிற்றர் பதிவில் தெரி வித்துள்ளார். (எ-இ)

## ஜனாதிபதியை பதவி விலகக்கோரி இன்று தொழிற்சங்கப் போராட்டம்

கொழும்பு, மே 13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை பதவி விலகுமாறு கோரி, ஜனாதிபதி செயல கத்துக்கு முன்பாக இன்று பெரும் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக் கப்படும் என்று தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ச கடந்த திங்கட்கிழமை பிரதமர் பதவியிலிருந்து விலகி யமையை அடுத்து, நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டம் நேற்றுமுன் தினம் கைவிடப்பட்டது. இந்த நிலையில் நேரத்தை வீணடிக்காமல் ஜனாதிபதி உடனடியாகப் பதவியை விட்டு விலகவேண்டும். நாட்டின் மறுசீரமைப்புச் செயற்பாடுகளை ஆரம்பிப் பதற்காக நாட்டிலுள்ள பல அரசியல் இயக்கங்கள் தமது வேலைத்திட்டங் களை முன்வைத்துள் ளன. எனவே ஜனாதிபதி யைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி, பிற்பகல் 2 மணிக்கு ஜனாதிபதி செயலகத்துக்கு முன் பாக தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக் கப்படும். அதற்கும் ஜனா திபதி பதவியைவிட்டு வில காதுபோனால், பெரும் தொழிற்சங்க நடவடிக் கையை மக்கள் போராட் டமாக மாற்றுவோம் என்றும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (க-இ)

## பிரதமருடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பு!

### ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, மே 13

உறுதியான இலங் கையை மீண்டும் கட்டி யெழுப்புவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுடன் ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்த்துள் ளேன் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமராக நிய மிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவித்துள்ள வாழ்த்தி லேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது-

நாடு மிகவும் கொந்த ளிப்பான தருணத்தில் இருக்கும் நிலையில் மிக வும் சவாலான பணியை பொறுப்பேற்பதற்கு முன் வந்து பிரதமராக நிய மிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு எனது வாழ்த்தைத் தெரி வித்துக் கொள்கிறேன். மீண்டும் உறுதியான இலங்கையை கட்டியெ ழுப்புவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவு டன் இணைந்து செயற் பட எதிர்பார்த்துள்ளேன் என்று அவர் தெரிவித் துள்ளார். (எ-இ)

## ஐக்கிய மக்கள் சக்தி இரு பிரிவாகப் பிளவு!

கொழும்பு, மே 13

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு பிரிவாகப் பிளவடைந்துள்ளது என்று தெரிய வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்பதற்கு முன்வந்துள்ளமையால் அவருக்கு ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் சக்தியின் ஒருதொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளனர்.

சுமார் 25 பேர் இது தொடர்பில் ரணிலுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். (ம)

## இந்தியத் தூதரகம் வாழ்த்து

கொழும்பு, மே 13

இலங்கையின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட் டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கைக்கான இந்தியத் தூதுரகம் வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் உத்தியோக பூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவேற்றியுள்ள பதிவில், அரசியல் உறுதிப்பாட்டை எதிர்பார்ப்பதுடன், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய் துள்ள நிலையில், ஜனநாயக முறைக்கு அமைவாக ஸ்தாபிக்கப்படும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. (எ-இ)

## பிரதமர் பதவி இனி கிடையாது அமைச்சுக்களைத் தர முடியும்!

### சஜித்துக்கு கோத்தாபய பதில்

கொழும்பு, மே 13

நான்கு நிபந்தனைகளு டன் பிரதமர் பதவியை ஏற்கத் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேம தாஸ நேற்று அனுப் பியிருந்த கடிதத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதில் அனுப் பியுள்ளார்.

பிரதமர் பதவியை ஏற் றுக்கொள்வதற்கான எனது முன் அழைப்பை ஏற்க நீங்கள் மறுத்து விட்டீர்கள். ஏனைய கட்சித் தலைவர்களு டன் கலந்துரையாடிய பின்னர் நான் ரணில் விக்கிரமசிங்கவை நிய மித்தேன், அதனை மாற்ற முடியாது. உங் கள் கட்சி உறுப்பினர் களில் யாரையாவது அமைச்சரவையில் சேர்க்க விரும்பினால், அதை எனக்குத் தெரி யப்படுத்துங்கள் என்று அவர் அந்தக் கடிதத் தில் தெரிவித்துள்ளார் என்று தெரியவருகின் றது. (எ-இ)

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் விசாரணைக்கு அழைப்பு



கொழும்பு, மே 13

மேல் மாகாணத்துக் குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் மனித உரிமை கள் ஆணைக்குழு வுக்கு இன்று அழைக் கப்பட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதி ரான போராட்டங்களில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வன்முறை கள் தொடர்பான விசார ணைக்கு அவர் அழைக் கப்பட்டுள்ளார்.

ஆணைக்குழுவில் ஏற் கனவே முன்னிலை யாகிய பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணு வத் தளபதி ஆகியோர் முன்வைத்த விடயங் களின் அடிப்படையில், பிரதிப் பொலிஸ்மா அதி பரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று மனித உரிமை கள் ஆணைக்குழுவின் தலைவர், ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹினி மார சிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை வட்டரெக்க சிறைச்சாலை கைதிகள் சிலர், கடந்த 9 ஆம் திகதி போராட்டத்தில் ஈடு பட்டவர்கள் மீது தாக் குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்கு, சிறைச் சாலைகள் ஆணையா ளர் நாயகம் மற்றும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் ஆகியோர் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு நேற்று அழைக் கப்பட்டனர். (க-இ)



## கிளிநொச்சி மருத்துவமனையில் தாதியர் தினம் கடைப்பிடிப்பு

கிளிநொச்சி, மே 13

கிளிநொச்சி மருத்துவமனைத் தாதியர்களின் ஏற்பாட்டில், சர்வதேச தாதி யர் தின நிகழ்வுகள் மருத்துவமனையில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது உலகின் முதலாவது தாதியப் பெண்மணி நைட்டிங்கேல் அம்மையாருக்கு விளக்கேற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதேவேளை போரின்போது மருத்துவமனையில் கடமை யாற்றி உயிரிழந்த தாதியருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டதோடு தாதியர் கள் விளக்குகளை ஏந்தி சத்தியப்பிரமாணமும் செய்து கொண்டனர். அத்துடன் கொரோனாக் காலத்தில் சிறப்பாக செயற்பட்ட தாதியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தனர். (ஓ-14,113)

## ரணில் நியமனத்துக்கு டக்ளஸ் வரவேற்பு

கொழும்பு, மே 13

தற்போது நாடு எதிர் நோக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலையில் தற் போதைய பொருளாதார நெருக்க டிக்குத் தீர்வு காண்பதற்கு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக் கப்பட்டமை பொருத்தமான விட யம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டமையை அமெ ரிக்கா வரவேற்றுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**எஸ் பி எஸ் பபில்**
1h

ராக்கி கோட்டைக்குள்ள மீண்டும் கால்தடம் பதித்தால் கோட்டாவை அசைக்கவே முடியாது..!!

அப்போ உங்க ஹீரோ தோத்திட்டானா..?? ஒருக்கா ரண்டு தரமில்ல முப்பது தடவைகள் தோற்றும் அப்பப்போ கோட்டையில பிரைமினிஸ்டராக கால்தடத்தை பதிச்சிருக்கான்...!! இப்பவும் கோட்டைக்குள்ள நுழைய பிளான் பண்ணீட்டு இருக்கான்..!!

அவன் மட்டும் கோட்டைக்குள்ள மீண்டும் கால்பதிச்சா கோட்டாவை பதவிக்காலம் முடியுமட்டும் அகற்றவே முடியாது..!! போராட்டம் எல்லாம் புஷ்பாணமாக போயிடும்..!!

So..!!! ஜாக்கிரதை..!!! அவனைக் கோட்டைக்குள்ள கால்தடத்தை பதிக்கவிடாமல் தடுத்தா மட்டும் தான் கோட்டாவை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம் வெற்றி பெற முடியும்.



**Rimaz Ahamed** • Follow
13h

'சஜித்தும் கூடாது, ரணிலும் கூடாது, அநுரவும் கூடாதுன்னா ஒன்னு பண்ணுவோமா?

உங்க வாப்பா ஆதம்பாவாவ பிரதமராக்குவமா?'






**Neethan Naga**
13h

இனி வரும் Speech ல 30 வருட யுத்தத்த முடிச்சது , கொரோனாவ ஒழிச்சதுன்னு பேசுவ. .
அய்யய்யோ சத்தியமா பேச மாட்டனே. .
பேசுனா மே 9 மாதிரி . .



**Mathan Pathmanathan**
9m

கப்புட்டா காகா இருந்த இடம் தெரியாம போச்சு
மைனா பொந்துக்குள்ள ஒழிஞ்சுருச்சு
இப்போ நாட்டை காப்பாற்ற நரி வந்துருக்கு

அஞ்சலில் பஞ்சப் பேரிடர் பணி..
இடர் பல உற்றோம்
இடம் பல அலைந்தோம்
பிணி பல உற்றோம்
பசிப் பிணி உற்றோம்

உணவில்லைக் கண்டீர்
மருந்தில்லை கண்டீர்
மனிதமில்லை கண்டீர்
வாழ்வில்லை கண்டீர்
சுகநலமே சமாதான பாலம்
பகிர்ந்துண்டு வாழ்வோம்
வன்மம் களைவோம்
ஆடம்பரம் தவிர்ப்போம்

அரசு இல் அரசியல் இல்
அரசியல் இல் அரசு இல்
நில் நில் நிதானமாவே நில்
வெல் வெல் சாந்தியினை வெல்

இடர் களைவோம் பிணி களைவோம்
துயர் துடைப்போம் உயிர் கொடுப்போம்
அஞ்சலில் பஞ்சப் பேரிடர் என்றே
நெஞ்சினில் மிடுக்குடன் பணி பணி

மருத்துவர் சி.யமுனாநந்தா



# சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வன்முறைகளைத் தூண்டுவோர் கைது

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,மே 13

நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி, வன்முறைகளைத் தூண்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற அமைதியின்மையின் போது, வன்முறையைத் தூண்டினர் என்ற குற்றச்சாட்டில் 59 சமூக ஊடகக்குழுக்கள் மற்றும் அவற்றின் நிர்வாகிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வீடுகள், வாகனங்கள் மற்றும் பிற சொத்துக்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்காக, பல்வேறு சமூகவலைத்தளங்களில் இயங்கும் குழுக்கள் மூலம் இவர்கள் மக்களைத் திரட்டியுள்ளனர். இது தொடர்பில் ஏற்கனவே சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே நாடுமுழுவதும் அண்மையில் இடம்பெற்ற அமைதியின்மையின்போது சமூக ஊடகங்கள் ஊடாக வன்முறையைத் தூண்டியவர்கள் கண்டறியப்பட்டால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

# இராணுவ ஆட்சிக்கு வாய்ப்புகள் இல்லை

## இராணுவத் தளபதி மறுப்பு



கொழும்பு, மே 13

நாட்டின் ஜனாதிபதி, முப்படைகளின் தளபதியாகவும் இருக்கும் சூழலில், எதற்காக இராணுவம் ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என இராணுவத் தளபதியும் படைகளின் தலைமை அதிகாரியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கேள்வி எழுப்பினார்.

ஊடகவியலாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய சூழலில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றப்போவதாக ஒரு தகவல் உள்ளது. உண்மையில் இராணுவத் தளபதி எனும் ரீதியில் இதுதொடர்பில் நீங்கள் என்ன பதிலளிக்க விரும்புகின்றீர்கள்? என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த சவேந்திர சில்வா, நாட்டில் அரசமைப்பொன்று உள்ளது. அந்த அரசமைப்புக்கு அமையவே இராணுவம் செயற்படும். அரசமைப்புக்கு அமைய நாட்டை பாதுகாப்பதே செயற்பாடாகும்.

தற்போதைய சூழலில் நாம் அதனையே செய்கின்றோம். நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இருக்கும்போது இராணுவ ஆட்சி எப்படிச் சாத்தியமாகும்-என்றார். (ம)

# இலங்கையில் பாதுகாப்பில்லை அவுஸ்திரேலியா எச்சரிக்கை

கொழும்பு,மே 13

இலங்கையின் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை அடுத்து, அவுஸ்திரேலியர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நிலவும் பாதுகாப்பு நிலைமை காரணமாக, இலங்கைக்கான பயணத்தை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று அவுஸ்திரேலியர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அடுத்த மாதம் இலங்கையில் இருநாடுகளுக்கும் இடையில் கிரிக்கெட் தொடர் இடம்பெறவுள்ள நிலையில், சுற்றுப்பயணத்துக்கு முன்னதாக இலங்கையில் நிலவும் அரசியல் பதற்றம் குறித்து அவுஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர்களுக்கு விளக்கமளிக்கப்படும் என்று அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார மற்றும் வர்த்தக திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-இ)




# இரு மணித்தியாலங்கள் செயற்பட்ட பங்குச்சந்தை

கொழும்பு,மே 13

கொழும்பு பங்குச்சந்தையின் செயற்பாடுகள் நேற்று இரண்டு மணித்தியாலங்கள் மட்டும் இடம்பெற்றன. நேற்று மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பமான பங்குச்சந்தை பிற்பகல் 12.30 வரை செயற்பட்டது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உருவாகுமா 'கோ ரணில் கம'!

மஹிந்த ராஜபக்ச பதவி விலகியதைத் தொடர்ந்து அடுத்த பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நேற்றுமாலை பதவியேற்றுள்ளார். இதன் மூலம் இலங்கையில் மாத்திரமல்ல உலகிலேயே அதிக தடவைகள் பிரதமராகப் பதவி வகித்தவர் என்ற சாதனைக்கும் ரணில் சொந்தக்காரராகியுள்ளார். அதைவிட வெறும் ஒற்றை ஆசனத்தோடு அதுவும் தேசியப்பட்டியல் எம்.பியாக நாடாளுமன்றுக்குள் நுழைந்த ரணில், பிரதமராக மாறியிருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே. இப்படி படுதோல்வியடைந்த கட்சியொன்றின் தலைவர் பிரதமராவதெல்லாம் இலங்கையில் மட்டுமே நிகழக்கூடிய அபூர்வ சம்பவமே.

நாட்டின் தற்போதைய பொருண்மிய நிலையில் இருந்து நாட்டை மீட்கவல்ல வெகுசிலரில் ரணிலும் ஒருவர் என்று ஏற்படுத்தப்பட்ட தோற்றப்பாட்டின் அடிப்படையிலேயே ரணிலை பிரதமராக்கியதாக பலரும் கருதுகின்றனர். ஆனால், ரணிலின் நியமனம் நிலைபேறான மாற்றத்தை இந்த நாட்டில் ஏற்படுத்துமா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில்.

ரணிலுக்குப் பிரதமர் பதவி புதிதல்ல. இதற்கு முதல் ஐந்து தடவைகள் அந்தக் கதிரையை அலங்கரித்த ரணில், இப்போது ஆறாவது தடவையாக மீண்டும் பிரதமராகியிருக்கிறார். ஆனால், இந்த ஐந்து தடவைகளும் அவர் எதைச் சாதித்தார் என்று பார்த்தால், அவரின் 'சூழ்ச்சிகள்'தான் ஆங்காங்கே மிச்சமிருக்கும். தமிழீழ விடுதலைப்போரை சிதைத்தது முதல் தற்காலம் வரை அவரின் அரசியலில் இந்தச் சூழ்ச்சிகள் இரண்டறக் கலந்தவை. அது நீண்ட - நெடிய புராணம்.

2015ஆம் ஆண்டு ராஜபக்சக்களிடம் இருந்து மைத்திரியைப் பிரித்து அவரை ஆட்சிப்பீடம் ஏற்றினார் ரணில். 'நல்லாட்சி மலர்ந்துவிட்டது. ராஜபக்சக்களின் இனப்படுகொலைக்கு நீதி வெகுதொலைவில் இல்லை' என்றுதான் அப்பாவிச் சிறுபான்மை மக்கள் நினைத்தனர் - விரும்பினர். ஆனால், ரணில் உண்மையில் ராஜபக்சக்களுக்கு ஓர் அரணாகவே திகழ்ந்தார். 'நல்லாட்சி' என்ற போர்வையில் ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கான நீதிப்பொறிமுறைக்காக ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்துக்கு அவகாசங்களைப் பெற்றுக் கொடுத்ததுடன் ராஜபக்சக்கள் மீதான சர்வதேசத்தின் பிடியை தளர்த்தவும் , போர்க்குற்ற விசாரணையை நீர்த்துப்போகச் செய்யவும் ரணில் அத்தனை வழிவகைகளையும் செய்தார்.

2019ஆம் ஆண்டில்கூட கோத்தாபய வெற்றிபெற்று ஜனாதிபதியாகுவதற்குரிய அனைத்து முகாந்திரங்களையும் ரணிலே ஏற்படுத்தினார். சஜித்துக்கு எதிரான 'சேம் சைட் கோல்களை' ரணில் அக்காலத்தில் தாறுமாறாக விளாசிக்கொண்டிருந்தார். அவ்வளவு ஏன், தேர்தல் பிரசாரத்துக்காக கட்சிப்பணத்தைக் கொடுக்கவும் ரணில் மறுத்திருந்தார். இதனால் கோத்தாவின் வெற்றியில் ரணிலுக்கும் பெரிய பங்குண்டு. இத்தகையதொரு பின்னணியில்தான் இப்போது மீண்டுமொருமுறை பிரதமராக ரணில் அவதாரமெடுத்துள்ளார்.

ரணில் பிரதமரானால் நிச்சயம் அது மேற்கத்தேய நாடுகளுக்கு நல்ல செய்திதான். அமெரிக்காவினதும் மேற்கத்தேய நாடுகளினதும் செல்லப்பிள்ளை ரணில். இதனால்தான் ரணில் பிரதமரானதும் முதல் நாடாக அமெரிக்கா தன் வாழ்த்தைச் சொல்லியிருக்கின்றது. இதுவரைகாலமும் சீனா, இந்தியா என்ற இரு கடன் தெரிவுக்குள் இருந்து உழன்றுகொண்டிருக்கும் இலங்கைக்கு இப்போது இன்னுமொரு பாதை அகலத் திறந்திருக்கின்றது. அமெரிக்கா, மேற்கத்தேய நாடுகள் என்று இனிவரும் நாள்களில் இலங்கைக்கான கடனுதவிகள் அதிகரிக்கும். ஐரோப்பிய ஒன்றியம் தன் தாராள மனதை ரணிலுக்குத் திறந்து காட்டும். அவ்வாறு அனைத்தும் சுமுகமாகி பொருண்மிய மீட்சியொன்று ஏற்பட்டால் 'கோ ஹோம் கோத்தா' என்ற கோஷங்கள் தன்பாட்டில் அமுங்கிவிடும். இதுவரை காலமும் இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டுவந்த ராஜபக்சக்களின் சாபக்கேடான சகாப்தத்துக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும் அரிதான ஒரு தருணத்தை ரணிலின் பதவியேற்பு இல்லாமலே செய்துவிடக்கூடும்.

சஜித், அநுர இவர்களில் எவரை ஆட்சிப்பீடம் ஏற்றினாலும் அவர்கள் தமது முதல் கோரிக்கையாக, 'கோத்தாபய பதவி விலகவேண்டும்' என்றுதான் வலியுறுத்தியிருப்பார்கள். ஆனால், ரணில் அவ்வாறு வலியுறுத்தப்போவதில்லை. எதுவுமே இல்லாமல் தனியாளாக நிற்பவர் எப்படி நிபந்தனைகளை விதிப்பார்? ஆக, ராஜபக்ச தன் பதவிக்காலத்தின் எஞ்சிய நாள்களை எதிர்ப்பின்றிக் கொண்டுசெல்ல ரணில் தன்னாலான அத்தனை வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொடுப்பார். இந்தக் காலமானது ராஜபக்சக்கள் தம்மை ஆசுவாசப்படுத்திக்கொண்டு மீண்டு வருவதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திவிடும். உண்மையில் போராட்டங்கள் கோத்தாபயவையும் மஹிந்தவையும் மையப்படுத்தியதாக இருந்திருக்காமல் இன்னும் கொஞ்சம் நீண்டிருக்க வேண்டும். 'கோ ஹோம் ரணில்' என்பதாகவும் அது அமைந்திருக்க வேண்டும்.

தாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கியவர்களையே விடு செல்லுங்கள் என வலியுறுத்திக் கொண்டிருக்கையில், தம்மால் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டு, ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தின் மூலம் நாடாளுமன்றம் சென்ற (அதுவும் ஒரு வருடம் தாமதமாக) ரணில் பிரதமரானதை மக்கள் குறிப்பாக, காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் ஏற்றுக்கொள்வார்களா? இத்தனைநாள் அவர்கள் போராடியதெல்லாம் ரணிலுக்கு இறைத்த நீராக [illegible]? அல்லது 'கோகோத்தாகம' போல 'கோ ரணில்கம' [illegible]? பார்ப்போம் நடக்கப்போவதை!



**நாளொரு நல்வார்த்தை**

"உங்கள் குறைகளை நீங்களே அடையாளம் கண்டு கொள்வது தான் வளர்ச்சியின் அடையாளம்"
- ஷேக்ஸ்பியர்



## இலங்கையில் அடக்குமுறை

*ஐ.நா. கண்டனம்*

கொழும்பு,மே 13
இலங்கையில் பொலிஸ், இராணுவத்துக்கு வழங்கப்பட்டுள்ள அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளை ஐ.நா. கண்டித்துள்ளது. இலங்கையில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான கைதுகள், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான அடக்குமுறை தொடர்பில், ஒன்றுகூடுதலுக்கான சுதந்திரம் தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளெமன்ற் வொயூல் கடும்கண்டனத்தை வெளி யிட்டுள்ளார். (க-இ)

## அவசரகாலச்சட்ட நடைமுறை மனித உரிமைகளுக்கு ஆபத்து

*சர்வதேச மன்னிப்புச்சபை விசனம்*

**கொழும்பு,மே 13**
**இலங்கையில் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டமும், துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான உத்தரவும் மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்று சர்வதேச மன்னிப்புச்சபை விசனம் வெளியிட்டுள்ளது.**

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதரண சூழ்நிலையை அடுத்து, ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு அமைவாக அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், கலவரங்களைத் துண்டுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## அரச எதிர்ப்பாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு கண்டனம்

*ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை*

கொழும்பு, மே 13
அமைதியான முறையில் கொழும்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட அரச எதிர்ப்பாளர்கள் மீதான தாக்குதல்களை ஐரோப்பிய ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.
இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்தால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:
ஐரோப்பிய ஒன்றியமும் அதன் 27 உறுப்புநாடுகளும் இலங்கையின் தற்போதைய நிலைவரங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. இலங்கையர் தமக்குரிய கருத்துச்சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கடந்த ஒருமாதகாலமாக அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுத்துவந்த நிலையில், தற்போது வன்முறைகள் தூண்டப்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்ற கொழும்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான மிகமோசமான தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது. (ம)

## அவசரகாலச் சட்டத்தின் மூலம் மனித உரிமைகளை பறிக்காதீர்

*மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து*

கொழும்பு,மே 13
அவசரகாலச்சட்டத்தின் மூலமான அதிகாரங்களால், மனித உரிமைகளை மீறக்கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.
இலங்கையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதலை அடுத்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (க-இ)

**நாளை**
14.05.2022
சனிக்கிழமை
சித்திரை 31
சுபநேரம் : 02.53 - 04.23
ராகுகாலம்: 08.53 - 10.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பம்

## ஆர்மேனியர்களுக்கு 'ஹரிஸ்ஸா', யூதர்களுக்கு 'மற்சூ' ஈழத்தமிழர்களுக்கு 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'

### நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 13

தமிழினப்படுகொலையை நினைவேந்தி, முள்ளிவாய்க்கால் கஞ்சியுடன் ஆரம்பிக்கும் நிகழ்வை வரலாறாக மாற்றி, அடுத்தடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2009 ஆம் ஆண்டு தமிழர்கள் மீதான சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இனஅழிப்புப் போர்க்காலம். கடும் போர், உணவுத்தடை, மருந்துகளுக்குத் தடை, போர் தவிர்ப்பு வலயம் என்ற பெயரில் மக்களைக் கொத்துக் கொத்தாகத் தனது கொடிய ஆயுதங்களால் இனப்படுகொலை செய்தனர். இந்த நெருக்கடியான பெருந்துயரான காலத்தில் மக்களின் வயிற்றுப்பசியை நம்பிக்கையோடு கஞ்சி தீர்த்திருந்தது. போராளிகள் தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த அரிசியை மக்களின் பசிபோக்க கஞ்சியாகச் சமைத்து வழங்கியிருந்தனர். இதுவே 'முள்ளிவாய்கால் கஞ்சியாக' மக்களின் பெருந்துயரை நினைவேந்திக் கொள்ளப்படுகின்றது. இரத்தம் தோய்ந்த வரலாற்றின் வலிகளை அடுத்தடுத்த தலைமுறைகளிடம் கடத்தும் பண்பாடாக 20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய இனப்படுகொலைக்கு உள்ளான ஆர்மேனியர்கள் 'ஹரிஸ்ஸா' உணவையும், யூதர்கள் 'மற்சூ' உணவையும் கொண்டிருப்பது போல், ஈழத்தமிழர்கள் நாமும், 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'யை எமது அடுத்த தலைமுறையிடம் கடத்தும் ஒரு விடுதலைப் பண்பாடாக இதனை முன்னெடுப்போம்-என்றுள்ளது. (க-இ)



## இன அழிப்பு வாரத்தில் கஞ்சி பகிர்தல் ஆரம்பம்

மன்னார்,மே 13

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவாக, இனஅழிப்பு வாரத்தில் கஞ்சி பகிர்தல் மன்னாரில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள் நினைவாக மே மாதம் 12 ஆம் திகதியிலிருந்து மே 18 ஆம் திகதி வரை இனஅழிப்பு வாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நினைவுகூரப்படுகின்றது.

மன்னாரில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால், பள்ளிமுனை பெருக்குமரத்தடியில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி காய்ச்சப்பட்டது. (க-213)





## முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் யாழ்.பல்கலைக்கழகத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,மே 13

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரம், யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி முற்றத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அகவணக்கத்துடன் ஆரம்பமான நினைவேந்தல் நிகழ்வில், தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர் சங்கப்பிரதிநிதிகளால் மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், ஈகைச் சுடரும் ஏற்றப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட மாணவ ஒன்றியத் தலைவர், ஊழியர் சங்கத் தலைவர், அனைத்துபீட மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-125)

## விசேட அதிரடிப்படையினருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி



யாழ்ப்பாணம்,மே 13

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவாகக் காய்ச்சப்பட்ட கஞ்சி, பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கும் கொடுக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம் நினைவாலயத்தில் கஞ்சி காய்ச்சப்பட்டது.

இதன்போது வீதியால் பயணித்த பொதுமக்களுக்கு கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது. வீதியால் பயணித்த பொலிஸ் விஷேட அதிரடிப்படையினருக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி கொடுக்கப்பட்டது. பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை வாங்கிக் குடித்தனர். (க-26)



## முள்ளிவாய்க்கால் கஞ்சி பொதுமக்களுக்கு பகிர்வு

கிளிநொச்சி,மே 13

முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தை முன்னிட்டு, கிளிநொச்சியிலும் பொதுமக்களுக்கு நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு இனஅழிப்பு வாரம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றிலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கஞ்சி காய்ச்சப்பட்டு வீதியால் சென்ற பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. (க-113)





## இனப்படுகொலை ஆவணங்கள் நல்லூரில் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம்,மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்புகள் தொடர்பான ஆவணங்கள், நல்லூரிலுள்ள தியாகதீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்னால் நேற்றுக் காட்சிப்படுத்தப்பட்டன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்றிலிருந்து ஆரம்பமாகிய நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் காய்ச்சப்பட்டது.

நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி மற்றும் முன்னணியின் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். (க-26)



முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு, முள்ளிவாய்க்காலில் நேற்று கஞ்சி காய்ச்சப்பட்டு மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தாயகத்தில் வன்முறைகள் வேண்டாம்

## முன்னணியின் பேச்சாளர் ஆலோசனை

**யாழ்ப்பாணம், மே 13**

**நாட்டின் இந்த நிலைமைக்கும் தமிழ்த் தேசத்தின் அவலத்துக்கும் காரணமானவர்களை அடுத்த தேர்தலில் அரசியல் அனாதைகள் ஆக்குங்கள். ஆனால், தமிழர் தாயகத்தில் வன்முறைக்கு இடம்கொடுக்காதீர்கள் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் இந்த நிலைமைக்கும் தமிழ்த் தேசத்தின் அவலத்துக்கும் அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான், வியாழேந்திரன் மற்றும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்குள் மறைந்திருந்து அரச நிகழ்ச்சி நிரலைக் கனகச்சிதமாக நகர்த்து பவர்களும் காரணமென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. அதற்காகத் தமிழர் தாயகத்தில் அவர்களைத் தாக்குவதையோ அல்லது அவர்களது அலுவலகங்களுக்குத் தீ வைப்பதையோ ஜனநாயக அரசியலில் ஏற்றுக்கொள்ளமுடியாது. இவர்களுக்கான சரியான தண்டனை அடுத்த பொதுத்தேர்தலில் இவர்களுக்கு வாக்களிக்காது முற்றாகப் புறக்கணித்து இவர்களை அரசியல் அநாதைகளாக்குவதே!

இவர்களை எதிர்காலத்தில் அரசியல் ரீதியாகத் தோற்கடித்து தமிழ்த் தேச விடுதலைக்கு வலுச்சேர்க்க அனைவரும் சபதமெடுப்போம் - என்றார். (ம)

# உசுப்பேற்றலுக்கு எடுபட வேண்டாம்

## அங்கஜன் இப்படி கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணத்திலும் கலவரத்தை ஏற்படுத்த முனைகின்றார்கள். தமது அரசியல் தேவைக்காக உசுப்பேற்றுபவர்கள் தொடர்பில் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் - என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதன்.

இது தொடர்பில் அவர் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

யாழில் எனது அலுவலகம் எரிக்கப்பட்டது என பரவும் தகவல்கள் தவறானவை என்பதோடு, அலுவலக பதாகையில் சிறு பகுதி மாத்திரமே வன்முறையை தூண்டும் சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலூடாக யாழில் வன்முறையை தூண்டி குளிர்காய நினைப்பவர்கள் தமது அரசியல் கோழைத்தனத்தைக் கைவிடவேண்டும். இந்த நாளகளில் நாட்டின் அமைதி நிலவும் பகுதிகளாக வடக்கு மாகாணமும் யாழ்ப்பாண மாவட்டமும் இருக்கும் போது நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் அவசரகாலச்சட்டம், பாதுகாப்பு துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கருத்திற் கொள்ளாது இந்த அமைதியை சீர்குலைத்து அதனூடாக தமக்கான நிதி மூலங்களை பலப்படுத்தும் நோக்கில் சில அரசியல் கட்சிகளாலும், அதன் பிரதிநிதிகளாலும் முன்னெடுக்கப்பட்ட சமூகவிரோதச் செயலே இதுவாகும்.

இந்த கீழ்த்தரமான அரசியல் வலைக்குள் சிக்கிக் கொள்ளவேண்டாம் என்று எனதருமை யாழ். மாவட்ட மக்களை முதலில் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம-27)

# வன்முறையை கைவிடுங்கள்!

## ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, மே 13

வன்முறைகளில் ஈடுபடாமல் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாம் எதிர்கொண்டுள்ள பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களை வெற்றிகொள்வதற்கு இலங்கையர்களாக ஒன்றிணைய வேண்டிய தருணம் இது.

குறுகிய நோக்கங்களுக்காக மக்களின் அழுத்தத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் சில குழுக்களின் முயற்சிகளை முறியடிக்க உங்கள் அனைவரையும் ஒன்றிணையுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ம)

# அரசியல் பேதங்களை தவிர்த்து நாட்டைக் காப்பாற்ற ஒன்றுபடுக!

## முன்னாள் சபாநாயகர் கரு கோரிக்கை



அரசியல் அராஜக நிலையில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்றால், நாட்டின் சட்டவாக்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் ஈடுபாடுகளைத் தற்காலிகமாக ஓரம் தள்ளிவிட்டுப் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று முன்னாள் சபாநாயகரும் சமூகநீதிக்கான தேசிய அமைப்பின் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் ரீதியாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து இருக்கும் நாம், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முதல், தற்போது ஏற்பட்டிருக்கும் துர்ப்பாக்கிய நிலையில் இருந்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மக்களாட்சி கோட்பாடுகளைப் பின்பற்றி நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டியது இந்த நாட்டின் அரசியல் கட்சிகளினதும், சிவில் சமூகங்களினதும் முதற் கடமையாகும்.

அதற்காக அனைத்துத் தரப்பினரும் இளம் சமுதாயத்தினரின் குரலுக்குச் செவிமடுக்க வேண்டும். தற்போது காணப்படும் அரசியல் அராஜக நிலையில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்றால், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் ஈடுபாடுகளை தற்காலிகமாக ஓரம் தள்ளிவிட்டு பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். - என்றார். (ம)

# தனது தலையில் தானே மண் போட்டார் மஹிந்த

## வாசுதேவ சுட்டிக்காட்டு

மஹிந்த ராஜபக்சவின் செயற்பாடு யானை தன் தலையில் தானே மண்ணை யள்ளிப் போட்டுக்கொண்டதற்கு ஒப்பானது. என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உட்பட ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களால் நாட்டு மக்கள் தற்போது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கடுமையாக விமர்சிப்பதுடன், தாக்குதல்களையும் முன்னெடுக்கிறார்கள்.

அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து கடந்த மாதம் 3ஆம் திகதி முழு அமைச்சரவையும் பதவி விலகியதுடன் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் அப்போதே பதவி விலகியிருந்தால் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் சற்றுத் தணிந்திருக்கும் - என்றார். (ம)

# புதிய பிரதமரை நியமித்து விலகவேண்டும் ஜனாதிபதி

## கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, மே 13

புதிய பிரதமரை உடனடியாக நியமித்து விட்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியிலிருந்து விலகவேண்டும் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு ஜனாதிபதியும் பிரதமருமே முழுப்பொறுப்பு. அதனால்தான் இருவரையும் பதவி விலகக்கோரி மக்கள் ஒரு மாதத்துக்கு மேலாகப் போராடி வருகின்றனர். இந்த நிலையில், பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விலகியுள்ளார். இதையடுத்து முழு அதிகாரங்களும் ஜனாதிபதியின் கைகளுக்குச் சென்றுவிட்டன. இது நிலைமையை மேலும் மோசமாக்கும்.

இதனிடையே மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களும், வன்முறைச் சம்பவங்களும் தீவிரமடைந்துள்ளன. எனவே, புதிய பிரதமரை உடனடியாக நியமித்து விட்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் பதவியிலிருந்து விலகவேண்டும். அப்போதுதான் நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு கிடைக்கும் -என்றார். (ம)

# நாடெங்கும் கலவரத்தை மஹிந்தவே தூண்டினார்

## வாசுதேவ குற்றச்சாட்டு

கொழும்பு, மே 13

நாடெங்கிலும் தற்போது உருவாகியுள்ள கலவரத்துக்கான விதை, மஹிந்த அலரிமாளிகையில் மேற்கொண்ட சந்திப்பிலேயே போடப்பட்டது என்று தெரிவித்தார் முன்னாள் அமைச்சரான வாசுதேவ நாணயக்கார.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையில் மஹிந்த கடந்த மாதம் 3ஆம் திகதி பதவிவிலகியிருக்க வேண்டும். பிரதமர் பதவியில் இருந்து விலகாமல் மாற்று வழிமுறையில் பதவியைத் தக்கவைத்துக்கொள்ள அவர் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. கடந்த திங்கட்கிழமையன்று அலரிமாளிகைக்குப் பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை அழைத்து அவர்களைத் தூண்டிவிட்டு காலிமுகத்திடல் அமைதிவழி போராட்டகாரர்கள்மீது மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் பெரும் அழிவு ஏற்பட்ட பின்னர்தான் மஹிந்த ராஜபக்ச பதவி விலகியுள்ளார்- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையின் அசமந்தப்போக்கு: பாம்பு தீண்டி பெண் உயிரிழப்பு

## உறவினர்கள் குற்றச்சாட்டு


**யாழ்ப்பாணம், மே 13**

**பாம்பு தீண்டிய பெண்ணை மருத்துவமனையில் சேர்த்தபோது, அவருக்கு உரிய சிகிச்சையை வழங்கத் தாமதப்படுத்தியதால், அவர் உயிரிழக்க நேரிட்டது என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

கெற்பேலி மத்தி - மிருசுவில் பகுதியைச் சேர்ந்த பெண், பாம்பு தீண்டி, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு நேற்று முன்தினம் இரவு கொண்டு செல்லப்பட்டார். அவரை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றுமாறு உறவினர்கள் கேட்டுள்ளனர். எனினும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக யாழ்.போதனா மருத்துவமனைக்கு நோயாளர் காவுவண்டியை ஒருவருக்காக அனுப்ப முடியாது, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலேயே சிகிச்சை வழங்க முடியும் என்று மருத்துவமனையினர் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பெண் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். இதனை அடுத்து அங்கு கூடியிருந்த உறவினர்கள் களேபரத்தில் ஈடுபட்டனர். அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினரின் உதவியுடன் அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

உரிய நேரத்தில் மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டிருந்தால் அவர் உயிர் தப்பியிருப்பார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். மரண விசாரணையை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.சீ இளங்கீரன் மேற்கொண்டார். (சு-159)



# நெடுந்தீவில் மஞ்சள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 13

நெடுந்தீவுக் கடற்பரப்பில் 58 கிலோகிராம் மஞ்சளும் 6 ஆயிரத்து 970 இரசாயன உரப்பொதிகளும் நெடுந்தீவுக் கடற்படையினரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 மணிக்கு சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகை கடற்படையினர் பின்தொடர்ந்தபோது அதிலிருந்து இரண்டு பொதிகளை கடலுக்குள் வீசிவிட்டு படகில் பயணித்தவர்கள் தப்பிச் சென்றனர்.

இதன்போதே பொதிகளில் 58 கிலோகிராம் மஞ்சளும் 6 ஆயிரத்து 970 இரசாயன உரப்பொதிகளும் நெடுந்தீவுக் கடற்படையால் மீட்கப்பட்டன.

இதேவேளை- தப்பிச்சென்ற படகு மன்னார் பகுதியில் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-20)

# நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்

கிளிநொச்சி, மே 13

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு காரணமாக தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்வெட்டு காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள தண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மக்களின் நாளாந்த தேவைக்கு ஏற்ற அளவில் தண்ணீரை சுத்திகரித்து விநியோகிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதால் குறித்த இரு மாவட்டங்களில் இனிவரும் நாள்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனவே தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த நிலையின் காரணமாக பொதுமக்கள் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் பகல் வேளைகளில் விநியோகிக்கப்படும் தண்ணீரின் அளவு குறைவாகக் காணப்படுகின்றமையால் இரவுவேளைகளில் தாங்கிகளிலோ அல்லது கொள்கலன்களிலோ தண்ணீரைச் சேமித்து வைத்து பயன்படுத்துமாறும் வடிகாலமைப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-14-113)



# மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 13

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. (ஒ-14)

# யாழ்.போதனாவில் கைத்தொலைபேசிகளை திருடியவர் கைது

யாழ்.போதனா மருத்துவமனையில் கைத்தொலைபேசிகளைத் திருடி வந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 9 கைத்தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.போதனா மருத்துவமனையில் நீண்டநாள்களாக ஊழியர்கள் மற்றும் நோயாளிகளின் கைத்தொலைபேசிகள் திருட்டுப் போகின்றன எனப் பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்ட நிலையிலேயே குறித்தநபர் கைதுசெய்யப்பட்டார்.

மானிப்பாய் - சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டது

சாவகச்சேரி, மே 13

தென்மராட்சிப் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருந்த வேளை நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையால் குறித்த தினத்தில் கூட்டம் நடைபெறமாட்டாது என்று சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14-9)



# யாழ்.போதனா மருத்துவமனைக்கு மருந்துப்பொருள்கள் கையளிப்பு

யாழ். போதனா மருத்துவமனை சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு சிவபூமி அறக்கட்டளையால் ஒரு பகுதி மருந்துகள் நேற்று கையளிக்கப்பட்டன. சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு.திருமுருகன் மருந்துப்பொருள்களை மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.நந்தகுமார், பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா, மருந்தாளர் ஆகியோரிடம் கையளித்தார். சத்திரசிகிச்சைக்கு அவசியமான மயக்க மருந்துக்களுக்கு போதனா மருத்துவமனையில் தட்டுப்பாடு நிலவி வந்த நிலையிலேயே அதனை சிவபூமி அறக்கட்டளை வழங்கியுள்ளது. (ஒ-14)

# தவறிவீழ்ந்த மூதாட்டி சாவு!

மாடிப்படியிலிருந்து தவறிவீழ்ந்த மூதாட்டி சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீசாலை வடக்கில் மாடிப்படியிலிருந்து தவறிவீழ்ந்த நிலையில் குறித்த மூதாட்டி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையிலேயே அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (ச-9)

# பொலிஸாருக்கு பெற்றோல் இல்லை மூடப்பட்டது எரிபொருள் நிலையம்

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பெற்றோல் வழங்கப் பின்னடித்த எரிபொருள் நிரப்பு நிலையம், பொலிஸாரின் தலையீட்டுடன் மூடப்பட்டது. அங்கு எரிபொருள்களுக்காகக் காத்திருந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதியம் முதல் பெற்றோல் முடிவடைந்துவிட்டது என்று ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டபோதிலும் ஒரு சிலருக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. யாழ்.போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மாத்திரமே பெற்றோல் வழங்குகின்றோம் என்று ஊழியர்கள் தெரிவித்தனர். அதனால் அங்கிருந்த சிலர் ஊழியர்களுடன் முரண்பட்டனர்.

அதன்போது அங்கு இரு மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸார் தமக்கு பெற்றோல் நிரப்புமாறு ஊழியர்களிடம் கேட்டனர்.

அவர்களுக்குப் பெற்றோல் வழங்க ஊழியர்கள் தயாரானபோது, அங்கிருந்தவர்கள் மீண்டும் முரண்பட்டனர். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் 'எனக்கு கட்டாயம் பெற்றோல் தர வேண்டும்.

எனக்கு அடிக்க முடியாத பெற்றோல் இங்கே யாருக்கும் அடிக்கக்கூடாது" என்று கோபத்துடன் கூறி அங்கிருந்து சென்றார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் சென்ற ஒரு சில நிமிடத்தில் மேலதிக பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வருகை தந்தனர். எவருக்கும் பெற்றோல் விநியோகிக்க வேண்டாம் என்று ஊழியர்களுக்கு அறிவுறுத்தி 'அங்கிருந்தவர்களை' அப்புறப்படுத்தினர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணவரவு அதிகரிக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்று வீர்கள். நம்பிக்கையுடன் நினைத்த செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். முயற்சியில் வெற்றி உண்டாகும்.

**இடபம்:** உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்சினை நீங்கும். நிம்மதி உண்டாகும். விருந்தினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். இலா பம் ஏற்படும். பணவரவு உண்டு.

**மிதுனம்:** முக்கியமான செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்:** ஆதாயம் அதிகரிக்கும். வீட்டுக்குரிய நவீன சாதனங்களை வாங்குவீர்கள். லாபம் காண்பீர்கள். எதிர்கால நலன்கருதி திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் நெருக்கடி விலகும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த செய்தி வீடு தேடி வரும். தொழிலில் வெற்றி உண்டாகும். புதிய செயல்களுக்கு முயற்சிப்பீர்கள். பேச்சில் கவனம் தேவை. எதிர்பாராத லாபம் கிடைக்கும். ஆதரவு உண்டாகும்.

**கன்னி:** குழப்பங்கள் உண்டாகி திட்டமிட்ட செயல் முடியாமல் போகும். ஒருசிலரின் செயல்பாட்டால் மன அழுத்தம் அடைவீர்கள். கவனம் தேவை. புதிய முயற்சி தள்ளிப்போகும்.

**துலாம்:** திடீர் செலவு ஏற்படும். வாகனப்பயணத்தில் எச்சரிக்கை தேவை. அலைச்சல் அதிகரிக்கும். செலவு செய்து சில வேலைகளை முடிப்பீர்கள். உடல் நிலையில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** தொழிலில் வெற்றி காண்பீர்கள். பணவரவால் குடும்பத் தில் மகிழ்ச்சி ஏற்படும். உங்கள் திட் டங்கள் நிறைவேறும். உத்தியோ கத்தில் யோகமான நாள். உடல்நிலை சீராகும்.

**தனுசு:** நேற்றைய செயல் ஒன்று இன்று நிறைவேறும். நண்பர்கள் அறி முகமாவார்கள். தொழிலில் திட்டமிட்ட செயல் ஒன்று வெற்றியாகும். பிள்ளை களின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பீர்.

**மகரம்:** நேற்றுவரை இருந்த நெருக்கடி யிலிருந்து மீள்வீர்கள். புதிய பாதையில் பயணிப்பீர்கள். எதிர்பார்த்த இடங்க ளில் இருந்து உதவி கிடைக்கும் நாள். தடைப்பட்டிருந்த வேலைகள் முடியும்.

**கும்பம்:** எதிர்பார்க்காத செயலில் பிரச்சினை தலைதூக்கும். அமைதி தேவை. பணியிடத்தில் சங்கடம் தோன்றி மறையும். நட்புவட்டம் பெருகும். விழிப்பு ணர்வுடன் செயற்படுவீர்கள்

**மீனம்:** தொழிலில் இன்று நம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். வீட்டுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். யோகமான நாள். உங்கள் திறமை வெளிப்படும்.

# ஒருவருக்குக் கொரோனா நாடு முழுவதும் ஊரடங்கு

## வடகொரியா அதிபர் அதிரடி

பியாங்யாங்,மே 13

வடகொரியாவில் முதன்முறையாக ஒருவருக்குக் கொரோனாப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து வடகொரியா அதிபர் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவை பிறப்பித்துள்ளார். தற்போது கொரோனா உருமாற்றமடைந்து பல்வேறு நாடுகளில் பரவி பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்திவருகிறது.

எனினும் வடகொரியாவில் கொரோனாத் தொற்று ஏற்படவே யில்லை என அரசு தொடர்ந்து கூறி வந்தது.

இந்த நிலையில், அந்த நாட்டில் முதன்முறையாக ஒருவருக்கு கொரோ னாப் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கு பாதிப்பு உறுதியான நிலையில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

(ச-இ)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11.04.1938 | 12.05.2022 |



## சிவக்கொழுந்து இராசமணி

**[ மணியக்கா ]**

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து இராசமணி அவர்கள் நேற்று (12.05.2022) வியாழக்கிழமை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் பாதத்தை சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் நல்லம்மாவின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான நாகமணி பூரணம் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் பாசமிகு மனைவியும், (அமரர்) புவனேஸ்வரி, (அமரர்) கந்தசாமி, துரையம்மா, மனோன்மணி, வன்னியசிங்கம் அவர்களின் அன்பு சகோதரியும் சந்திராதேவி, மனோகரன், மகேந்திரன், சிவபாலன், சிவமணி, புவனேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், (அமரர்) சிவம், குமுதினி, வளர்மதி, கௌரி ஜெகதாம்பாள், பாஸ்கரநாராயணன், சத்தியதேவி ஆகியோரின் மாமியாரும், துளரிராம், பிரியராம், சத்யராம், கோகுலராம், திவ்யராம், கஜானி, பிரசாத், காயத்திரி, மதுமிதா, தர்ஷாந், சிவகாமி, நிலானி, றொசானி, பகீராம், சாரா, தமயந்தி, கோமதி, நிஷா, மற்றும் குபேந்தினி, ரஜிதா, பிரதீபன், சியாம், ராஜீப்பிரியன், நந்தினி, அமரர் வசந்தன், சரத்குமார் ஆகியோரின் பேர்த்தியும் கிஷோத்ரா, டிஷாந், இனியாள், மாயாடர்ஷனா, மீராலக்ஷ்மி, இந்துஜன், நேருஜன், சாருஜன்,பிருந்தா, ஷைமி, ஹிமாயா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**போக்காலை வீதி,**
**உடுப்பிட்டி.**

தகவல்
**குடும்பத்தினர்**
**021 205 5890**

# தாயக மண்ணில் அரங்கேறிய இனப்படுகொலையை மறக்கவும் மாட்டோம்: மன்னிக்கவும் மாட்டோம்

இறுதிக்கட்டப்போரின் போது 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இதே நாளில் உதயனில் வெளியான செய்திகள் நினைவூட்டலுக்காக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா எழுதிய 'யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு' என்ற நூலின் வெளியீடு, நேற்றுமுன்தினம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம் பெற்றது. நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் ஜெபநேசன், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-14,125)



நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அதிபர் சி.பவளகுமாரனின் மணிவிழா நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.மதீசன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-159,9)



இராணுவத் தளபதி சவேந்திர சில்வா யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், அவரால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிக்கு வீடும், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ய-20)





போக்கட்டி அ.த.க. பாடசாலையில் ஆசிரியர்களுக்கான திறன் வகுப்பறை பயன்பாடு தொடர்பான செயலமர்வு அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ய-159)

## மின் தடை அட்டவணை

| மின் தடை நேரம் | மின் வழங்கல் திரும்பும் நேரம் | காலம் | பிரிவு |
|---|---|---|---|
| காலை 8 மணி முதல் காலை 8.30 மணி வரை | மு.ப. 11.20 மணி முதல் மு.ப. 11.50 மணி வரை | 3 மணி 20 நிமி. | A, B, C, D, U, V, W |
| மு.ப. 11.20 மணி முதல் மு.ப. 11.50 மணி வரை | பி.ப. 2.40 மணி முதல் மு.ப. 3.10 மணி வரை | 3 மணி 20 நிமி. | E, F, G, H, R, S |
| பி.ப. 2.40 மணி முதல் மு.ப. 3.10 மணி வரை | பி.ப. 6 மணி முதல் மு.ப. 6.30 மணி வரை | 3 மணி 20 நிமி. | I, J, K, L, T, P, Q |
| பி.ப. 6 மணி முதல் மு.ப. 6.30 மணி வரை | இரவு 7.40 மணி முதல் இரவு 8.10 மணி வரை | 1 மணி 40 நிமி. | A, B, C, D, U, V, W |
| பி.ப. 7.40 மணி முதல் இரவு 8.10 மணி வரை | இரவு 9.20 மணி முதல் இரவு 9.50 மணி வரை | 1 மணி 40 நிமி. | E, F, G, H, R, S |
| இரவு 9.20 மணி முதல் இரவு 9.50 மணி வரை | இரவு 11 மணி முதல் இரவு 11.30 மணி வரை | 1 மணி 40 நிமி. | I, J, K, L, T, P, Q |
| காலை 6 மணி முதல் காலை 6.20 மணி வரை | காலை 9 மணி முதல் காலை 9.20 மணி வரை | 3 மணி | CC |
| காலை 5 மணி முதல் காலை 5.20 மணி வரை | காலை 8 மணி முதல் காலை 8.20 மணி வரை | 3 மணி | M, N, O, X, Y, Z |

வாசகர் திருமுகம்

# வினைத்திறனான கழிவகற்றலுக்கு வழிவகையை மேற்கொள்ளுங்கள்

உதயன் பத்திரிகையின் கடந்த மூன்றாம் திகதிய பதிப்பின் 11ஆம் பக்கத்தில் வெளியான செய்தியொன்றில் யாழ். நகரின் திண்மக் கழிவகற்றல் திட்டத்தை மேம்படுத்துவதற்கு அமெரிக்கத் தூதுவரிடம் உரிய பொறிமுறைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குமாறு யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார் என்று வந்திருந்தது.

நகரின் நலனில் பிரதி முதல்வர் கொண்டுள்ள ஆர்வத்துக்கு-அக்கறைக்கு மதிப்பளிக்கும் வேளை, சில விடயங்களை மிகுந்த மனவருத்தத்துடன் இங்கு குறிப்பிட வேண்டியது நகரின் திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகளை மேம்படுத்த மேலும் உதவியாக இருக்கும் என்பது எனது தாழ்வான கருத்தாகும்.

சில மாதங்களுக்கு முன் யாழ். மாநகர சபை அதிகாரிகளால் திண்மக்கழிவகற்றல் தொடர்பான நேர அட்டவணை வீடு வீடாகத் தரப்பட்டது. இசையை ஒலிபரப்பியவாறு வாரத்தில் இரு தடவைகள் வீதிக்கு வீதி வரும் கழிவற்றல் வாகனங்களில் ஒலிபரப்பப்படும் இசையொலி குடியிருப்பாளர்களைத் தயார்ப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

தற்போது வாரத்தில் ஒருதரம்கூட ஒழுங்காக வருவதில்லை. இசை ஒலிபரப்பப்படுவதும் இல்லை. சமையலிலோ வேறு கைவேலைகளிலோ ஈடுபட்டுள்ள நிலையில் நினைத்த பாட்டுக்கு வரும் வாகனங்கள், இயந்திரங்களின் மிகையொலியை எழுப்பும்போது கையில் எடுத்ததை போட்டதுபோட்டபடி விட்டுவிட்டு கழிவுகளை ஒப்படைக்க பெரும் சிரமப்பட வேண்டியிருக்கிறது. இசை ஒலிக்கும் செயற்பாடு எதற்காக என்பதை புரியாத அளவுக்கு சம்பந்தப்பட்ட பணித்தொகுதியினர் இருக்கின்றனர் என்பது மனவருத்தத்துக்குரியதே.

கழிவகற்றல் செயற்பாடுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட இலஞ்சம் வழங்கப்படுவது அனைவரும் அறிந்ததுடன் அது தவிர்க்க முடியாததாகவும் ஆகிவிட்டது. கழிவுகளை அகற்றும்பணி ஒழுங்காக நடைபெறாவிடில் அவை கூடுதலாகச் சேர்ந்துவிடும். இதனால் அங்கீகரிக்கப்பட்ட இலஞ்சமும் கூடுதலாக வழங்க வேண்டியேற்படும். ஒழுங்கற்ற சேவைக்கு இதுவும் காரணம் எனலாம். அதுமட்டுமல்லாது கழிவுகளை வீடுகளில் சேமிக்க முடியாதவர்கள் இவ்வாறான தாமதங்களால் இரவில் அவற்றை மூடைகளில் கட்டி வந்து சந்திகளில் வீசிவிட்டும் செல்கின்றனர். கழிவகற்றலின் ஒழுங்கீனமான செயற்பாடுகளுக்கு உதாரணமாக, சிவன் பண்ணை வீதியில் கடந்த ஏப்ரல் மாதம் 01, 06, 28ஆகிய திகதிகளில் மட்டுமே கழிவகற்றல் மேற்கொள்ளப்பட்டது. இந்த மாதத்தில் இதுவரையில் இல்லை.

திட்டமிடல்களை ஒழுங்கமைக்கும் அதிகாரிகள் அவை பற்றி அக்கறைகொள்ளமாட்டார்கள், தொடர் நடவடிக்கைக்கு உட்படுத்தமாட்டார்கள் எனும் துணிச்சல்தான் இத்தனை ஒழுங்கீனங்களுக்கும் காரணமாகின்றன என்ற கவலை மேலிடுகின்றது. இதில் மாற்றுக் கருத்துடையவர்களுக்காக எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் எவரையும் நோகடிக்க வேண்டி இதை எழுதவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- கி.வே.கிருஷ்ணானந்தன்



தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் பெண்கள் பிரிவில் வரணி இளைஞர் அணி வெற்றிபெற்று இவ்வருட சம்பியனானது. நாவற்குழி காந்தி அணியை வீழ்த்தியே வரணி இளைஞர் அணி கிண்ணம் வென்றது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

நில.பர.05 குளி 05 விஸ்தீரணம் கொண்ட கொழும்பு சுப்பர் மார்ட் பிரைவட் லிமிட்ட் நிறுவனமும் அத்துடன் இணைந்த வீடும், சுற்று மதிலும், கிணறும், அமைந்த வியாபார நிலையமானது விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:- 071 480 3765




## உதவி பூசகர் தேவை

எமது ஆலயத்திற்கு நித்தியகடமைகளை செய்ய உதவி பூசகர் (பிராமணர்) தேவை.
சம்பளம் உள்ளிட்ட ஏனைய விபரங்களை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 6341 393

நம்பிக்கை பொறுப்பாளர்
பரிபாலன சபை,
கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில்
முதலாய கோயில்கள், கைதடி.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 13 |
| 04 | 05 |
| 1940 | 2021 |

### அமரர் திரு. முருகேசு அமரலிங்கம்

திதி : 02-05-2022

பிறப்பவர் எல்லாம் இறப்பவர்
எனினும் சிறப்புயர்வுற்றோர் – என்றும்
சிந்தையில் இருப்பர்

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

## தசாக கிரகயக்ஞ அழைப்பு

கடந்த 05.05.2022 வியாழக்கிழமை
சிவபதபேறு அடைந்த எமது
குடும்பத் தலைவி

### ஸ்ரீமதி சிற்சபேசக் குருக்கள் இலட்சுமியம்மா

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள்
பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | |
|---|---|
| 14.05.2022– | சனிக்கிழமை தசாகம் காலை 10மணி |
| 15.05.2022– | ஞாயிற்றுக்கிழமை ஏகோதிஸ்டம், மாசியம் |
| 16.05.2022– | திங்கள் சபிண்டீகரணம் |
| 17.05.2022– | செவ்வாய் கிரகயக்ஞம் |

அன்னாரின் ஆத்மசாந்தி கிரியைகளில் பங்குபற்றி
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு
வேண்டுகின்றோம்.

அராலி தெற்கு,
அராலி.

குடும்பத்தினர்.
0777 204 010

# வன்முறையை நிறுத்துவோம்

## நாமலில் உருக்கமான பதிவு



கொழும்பு, மே 13
பயங்கரமான சூழ் நிலையில், பயங்கரமான நேரத்தில் இறந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். இனியாவது வன்முறையை நிறுத்துவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளதாவது:- "இறந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். குறிப்பாக, அமரகீர்த்தி அத்துகோரல. எல்லாவகையிலும் அவர் ஒரு நல்ல மனிதர். வன்முறையை நிறுத்துவோம்" -என்று பதிவிட்டுள்ளார். (க-இ)

## காணவில்லை



கடந்த ( 11.05.2022 ) புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் யாழ் வைத்தியசாலையில் இருந்து **வேலாயுதம் மனோகரி** எனும் மனநிலை பாதிக்கப்பட்டவரை காணவில்லை. காண்பவர்கள் தகவல் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:- 077 673 6854

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
30.08.1968

மறைவு :
03.05.2012

### அமரர் கைலைலிங்கம் முருகதாஸ்

(முன்னாள் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்)

திதி: துவாதசி (13.05.2022)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

28/7, இராமகிருஸ்ணா
பாடசாலை வீதி, கோண்டாவில்
கிழக்கு, கோண்டாவில். (CS 44532) (3/6)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் :- 16.10.1932
மறைவு :- 12.05.2022

### சரவணமுத்து மனோன்மணி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கடையிற்சுவாமி வீதியை வசிப்பிடமாக்வும் கொண்ட சரவணமுத்து மனோன்மணி அவர்கள் நேற்று (12.05.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சரவணமுத்து அவர்களின் மனைவியும் சிவகுமார் (பெல்ஜியம்), வனஜா (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம்), அனுஷா (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாதவிருதயர் (ஐங்கரன் மல்ரி சென்ரர்), சிவனேஸ்வரன் (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமை மாமியாரும் சிவப்பிரஷாந்த், நிரோஷினி, துவாரகன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2022) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு 42,கடையிற் சுவாமி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 922 9041, 077 036 5739

### காலை...

தளர்த்தப்படும் என்றும், மீண்டும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம், மறுநாள் சனிக்கிழமை காலை 6 மணிவரை நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### தாய்ப்பால்...

துள்ளது. இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைபொலிஸ்பிரிவுக்குட்பட்டவட்டு மேற்கு, மாவடி, குளிப்பன் பகுதியில் நடந்துள்ளது.

தாய் பால் கொடுத்த பின்னர் சிறிது நேரத்தில் குழந்தை மயக்கமடைந்துள்ளது. அதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தது. தாய்ப்பால் புரைக்கேறியமையே உயிரிழப்புக்குக் காரணம் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டன. (எ-125)

### பொருத்தமற்றவர்...

கும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்துள்ள கோரிக்கைகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் பிரதமராக நியமிக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கட்சி சாரா சுயாதீன உறுப்பினர் ஒருவரை இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக நியமிக்க வேண்டும் என்று பௌத்த மகா பீடங்கள் முன்வைத்த கோரிக்கைக்கு என்ன ஆயிற்று? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## கழிவுப்பொருட்கள் ஏற்றுமதி

யாழ் மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் வழங்குனரிடமிருந்து யாழ். மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகர சபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 25.05.2022 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பிற்பகல் 3.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி உள்ளடங்களாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான விபரங்களை அலுவலக நாட்களில் யாழ். மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 26.05.2022 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் **தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் கேள்விச்சபையால் நிராகரிக்கப்படும்.

கேள்வி திறத்தல் 26.05.2022 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**யாழ். மாநகரசபை.**

(CR 35967) ((3/6)

# மரண அறிவித்தல்



## திருமதி கணபதிப்பிள்ளை அமிர்தமணி

**பிறப்பு** 07.09.1935 — **இறப்பு** 10.05.2022

மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல 16C, மடம் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை அமிர்தமணி கடந்த (10.05.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மருதர்- சொர்ணம் ஆகியோரின் அன்பு மகளும், வைத்தி - இராமாசி ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்தி கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, விசாலாட்சி, தங்கமேனி, மற்றும் ராமையா காலஞ்சென்ற கண்ணகை, பூமணி, யோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேஸ்வரி (இந்தியா), கமலேஸ்வரி, கண்ணதாசன் (சுவிஸ்), கலாவதி, அகிலன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணபதிப்பிள்ளை, கில்டா (சுவிஸ்), சிறிபதி, ஶ்ரீமாவதி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், தீபா, லக்சன் (அவுஸ்திரேலியா), பாலினி, லோஜினி, யதீஸ்வரன் (ஜேர்மனி), ஸதீஸ்கா, கார்த்திகா, நிவேதிகா, சுஜானி (சுவிஸ்), சுஜித் (சுவிஸ்), சுஜாந் (சுவிஸ்), தனுஷ்கா, மதனப்பிரியா, சோபிகாசினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாருஜன், ரஸ்வின், யதுஷன் (ஜேர்மனி), அனுத்திரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 4415) (3/6)

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 31 - 08 - 1942



**மறைவு** 12 - 05 - 2022

## திரு. முத்தையா தேவராசா

**Retd.Tech.Engineer (River Valleys Development Board)**

சங்கானையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம், மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திரு.முத்தையா தேவராசா அவர்கள் நேற்று (12.05.2022) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் சங்கானையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முத்தையா செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், மாவிட்டபுரத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராமநாதன் சிவமணி அவர்களின் பாசமிகு மருமகனும், மல்லிகாதேவி அவர்களின் அன்புக் கணவரும், தயான், பன்னீர்செல்வன், கமலாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தி அவர்களின் பாசமிகு மாமனாரும், ஷாஷ்வதி, ஷஷ்டிக்குமரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், திரு.தியாகராசா அவர்களின் பாசமிகு தம்பியும், திருமதி நாகேஸ்வரியின் மைத்துனரும், மணிமேகலை, சத்தியேந்திரா, கேசவ்ன், ஆதவன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், திரு. மன்மதராசா அவர்களின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, ந.ப 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.17/6, கல்லூரி ஒழுங்கை,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 19…)

# மரண அறிவித்தல்



## திருமதி இராசையா கமலாதேவி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா கமலாதேவி நேற்று (12.05.2022) அதிகலை 12.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணம் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், வைரமுத்து இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், குகவரதன் (இலண்டன்), சத்தியா, புனிதவதி (கனடா), பத்மா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தினி (இலண்டன்), உதயகுமாரன், சோதியலிங்கம் (கனடா), சதீசன் (இலண்டன்), ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், மகேஸ்வரி, மகாதேவன், நடராசா, பரமேஸ்வரி, அன்னபூரணம் மற்றும் சிவனேசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜனா, லக்சனா (இலண்டன்), தனஶ்ரீ, கோபி - அமிர்தா, கஜனா, வெங்கடேஸ் (கனடா), சுபீட்சன், சுயேட்சன் (இலண்டன்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சேயோனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுகொள்ளுகிறோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 44605 (3/6)

# மரண அறிவித்தல்

**அன்னை மடியில்** 02 - 12 - 1940



**ஆண்டவன் அடியில்** 10 - 05 - 2022

## திரு. வைத்தியநாதன் சிறிபத்மநாதன்

**(முன்னாள் உதவி பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி - வடமாகாணம்)**

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியநாதன் சிறிபத்மநாதன் அவர்கள் கடந்த (10.05.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன் - செல்லமமா தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற அம்பலவாணர் - குஞ்சியாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும், வசுந்தரா, காண்டீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், மைத்திரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஷிரவன்பிரகாஷ் இன் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான புலவர் அரியநாயகம், சுந்தரலிங்கம், சுவாமிநாதன் மற்றும் தனலட்சுமி, குணநாதன் விஜயலட்சுமி, காலஞ்சென்ற ஜெயநாதன் மற்றும் பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மகுலசிங்கம், தேவகி, லீலாவதி, குமாரகுலசிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**261/7, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொ.பே. இல**
**021 222 0173**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 44604 (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6ஆவது...

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து, அதற்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று கடந்த சில மாதங்களாக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக கொழும்பு, காலிமுகத் திடலில் "கோத்தா கோ கம" என்ற போராட்டத்தளத்தை அமைத்து கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக ஆயிரக்கணக்கான மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். எனினும் ஜனாதிபதியும், அரசாங்கமும் தொடர்ந்து பதவி விலக மறுத்து வந்தனர்.

கடந்த 9 ஆம் திகதி அப்போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ச தனது பிரதேச மட்ட ஆதரவாளர்களை கொழும்புக்கு அழைத்து கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தார். கூட்டம் முடிவடைந்த பின்னர் மஹிந்த ராஜபக்ச ஆதரவாளர்கள் அலரி மாளிகை அருகே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீதும், காலிமுகத் திடலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீதும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். அதையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் , மஹிந்தவின் ஆதரவாளர்களை விரட்டி விரட்டித் தாக்கியதுடன், நாட்டின் பல இடங்களில் உள்ள ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் வீடுகளைத் தீயிட்டு எரித்தனர். 40க்கும் மேற்பட்ட வீடுகள், சொத்துக்கள் பொது மக்களால் தீயிட்டு எரிக்கப்பட்டன.

அதையடுத்து மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியில் இருந்து அவசர அவசரமாக விலகியதுடன், பாதுகாப்புக் காரணங்களுக்காக திருகோணமலையில் உள்ள கடற்படை முகாமில் தங்கியுள்ளார்.

பிரதமர் பதவி விலகியதை அடுத்து பிரதமர் பதவியை ஏற்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியில் இருந்து விலகும் வரையில் பிரதமர் பதவியை ஏற்க முடியாது என்று சஜித் பிரேமதாஸ அறிவித்திருந்தார். மற்றொரு எதிர்க்கட்சியான தேசிய மக்கள் சக்தியும் இதே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

அதையடுத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே பிரதமர் பதவி தொடர்பான இணக்கப்பாடு ஏற்பட்டது. இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் தங்களின் முடிவை மாற்றிக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி, சில நிபந்தனைகளுடன் பிரதமர் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்கத் தயார் என்று ஜனாதிபதிக்கு நேற்றுக் கடிதம் அனுப்பியது. ஆயினும் அதை ஜனாதிபதி நிராகரித்ததை அடுத்து, நேற்று மாலை ரணில் விக்கிரமசிங்க 6 ஆவது முறையாக இலங்கையின் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. அந்தக் கட்சியில் போட்டியிட்ட எவரும் வெற்றிபெறாத நிலையில், கட்சி பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில் ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் அந்தக் கட்சிக்கு கிடைத்திருந்தது. தேசியப் பட்டியல் ஊடாக யார் நாடாளுமன்றம் செல்வது என்ற குழப்பம் ஐக்கிய தேசியக் கட்சியில் நீடித்த நிலையில், ஒரு வருடத்தின் பின்னர் தேசியப் பட்டியல் ஊடாக ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தார். தற்போது அவர் நாட்டின் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

(அ-எ-இ)

## முள்ளிவாய்க்கால்...

வுள்ள நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று ஆரம்பமானது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தைமுன்னிட்டு, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள் வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்டன. இறுதிப்போரில் மக்கள் எதிர்நோக்கிய துன்பங்களை நினைவுகூரும் வகையில் பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது. (எ-இ)

## புதிய...

அமைச்சரவைக்கான பெயர் பட்டியல் இன்று இறுதி செய்யப்படும் என்று அறியமுடிகின்றது. பெயர் பட்டியல் இறுதி செய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தீர்மானிக்கும் தினத்தில் புதிய அமைச்சரவை பதவியேற்கவுள்ளது.

தற்போது அமைச்சுகளுக்கான விடயதானங்கள், அமைச்சுகளின்கீழ்வரும் நிறுவனங்கள் மற்றும் அமைச்சுகளுக்கான செயலாளர்கள் நியமனம் தொடர்பான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன. இதன் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக பிரதமரின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நேற்று நியமிக்கப்பட்டார்.

புதிய அமைச்சரவையில் 20 பேர் இடம் பெறக்கூடும் என்று தெரிகின்றது. நிதி மற்றும் நீதி அமைச்சுப் பதவிகள் அலி சப்ரியிடமே கையளிக்கப்படும் என்றும், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு முடிவடைந்த பின்னர், நிதி அமைச்சுப் பதவியில் மாற்றம் வரலாம் என்றும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, புதிய பிரதமர் தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்த மாத இறுதியில் இந்தியா பயணிப்பார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## "கோத்தா...

காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்துக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தப்பட மாட்டாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்றுப் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டபின்னர், ரணில் விக்கிரமசிங்க மத வழிபாடுகளில் கலந்து கொண்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கோத்தா கோ கமவில் கைவைக்க மாட்டோம். நாடு கட்டியெழுப்பப்பட்டு இளம் தலைமுறையினருக்குச் சிறப்பான எதிர்காலம் உருவாக்கப்படும். ரூபாவின் பெறுமதி ஸ்திரப்படுத்தப்படும். நாளை (இன்று) அமைச்சரவை நியமிக்கப்படாது." என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ-எ-இ)

## மறைந்திருக்கும்...

பக்ச மற்றும் அவரது மகனான முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச ஆகியோர் வாழ்த்[illegible] ரணில் பதவி[illegible] இவர்கள் ருவிற்றர் வாயிலாகத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலில் மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட வன்முறைச் சம்பவங்களின் பின்னர் பதவி விலகிய மஹிந்த ராஜபக்ச தற்போது பாதுகாப்பு அச்சத்தால் திருகோணமலையில் உள்ள கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ச உட்பட ராஜபக்ச சகோதரர்களின் வீடுகள் மக்களால் தீயிடப்பட்ட நிலையில் நாமல் ராஜபக்ச தற்போது எங்குள்ளார் என்பது தெரியவில்லை. இந்தநிலையில் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

(அ-எ-இ)

## பிரதமராக...

தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்றத் தெரிவில் சட்டபூர்வமான அங்கீகாரம் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது ருவிற்றரில் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி முற்றாக சட்டபூர்வமான தன்மையை இழந்து விட்டார். அவர் வீட்டுக்குச் செல்வதையே மக்கள் விரும்புகின்றனர். ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றம் விரைவில் முடிவைக் காண்பிக்கும். ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்றத் தெரிவில் சட்டபூர்வமான அங்கீகாரம் இல்லை. அவர் தனது தொகுதியில்கூட இந்தமுறை வெற்றிபெறவில்லை. எனவே அவர் பிரதமராகவும் உரிமையில்லைஎன்றுள்ளார். (எ-இ)

## தப்பி...

தப்பியோடும் எண்ணம் துளியும் இல்லை என்று முன்னாள் அமைச்சரும், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மகனுமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நடைபெறும் எந்தவொரு விசாரணைக்கும் தனிப்பட்ட முறையில் ஒத்துழைப்பு வழங்குவேன். எனக்கோ எனது தந்தைக்கோ நாட்டை விட்டுச் செல்லும் எண்ணம் இல்லை என்று தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## பிரதமரின்...

2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டுவரையான நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் மூன்று தடவைகள் பிரதமரின் செயலாளராக நியமிக்கப்பட்ட ஏக்கநாயக்க, தற்போது நான்காவது முறையாக பிரதமரின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

ஏக்கநாயக்க பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். (அ-எ-இ)

## ராஜபக்சக்களின்...

விக்கிரமசிங்கவும், கோத்தாபய ராஜபக்சவும் நம்பும் தீர்வை நாட்டில் உள்ள எவராலும்நம்பவோஏற்றுக்கொள்ளவோ முடியாது.

[illegible] மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பாக ஓமல்பே சோபித தேரர் தலைமையிலான பௌத்த தேரர்கள் குழுவொன்று நேற்று பத்தரமுல்லவில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோத்தாபய ராஜபக்சவை ரணில் விக்கிரமசிங்க நம்புவதும், ரணில் விக்கிரமசிங்கவை கோத்தாபய ராஜபக்ச நம்புவதும் தான் நடக்கும். அவர்கள் செய்வதை நாட்டின் குடிமக்கள் எவரும் நம்ப மாட்டார்கள். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், ரணில் விக்கிரமசிங்கவும் மக்களின் ஆணைக்கு செவிசாய்க்காமல் தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க ராஜபக்சக்களின் பாதுகாவலர், அவர் அவர்களின் பாதுகாப்புக்காகவே அதிகாரத்தைப் பெறுகிறார். அதே சமயம் ராஜபக்சக்கள் ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாவலர்கள். அதைத்தான் கடந்த இரண்டரை வருடங்களாக நாங்கள் சுட்டிக்காட்டி வருகிறோம்.

மக்களின் கோரிக்கைகளுக்கு யார் செவிசாய்க்கிறார்கள் என்பதில்தான் நெருக்கடிக்கு தீர்வு உள்ளது. சூழ்ச்சிக்காரர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான தீர்மானங்களே எட்டப்பட்டுள்ளன. மாளிகைகளில் நடைபெறும் சதிகளின் மூலமாக மக்களின் உண்மையான எதிர்பார்ப்பும் அபிப்பிராயங்களும் நிறைவேற்றப்படவில்லை - என்றார். (அ-எ-இ)

## மஹிந்த...

டமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைவாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சஞ்ஜீவ எதிரிமன்ன, காஞ்சன ஜயரத்ன, நாமல் ராஜபக்ச, ரோஹித அபேகுணவர்தன, சி.பி.ரத்னாயக்க, சம்பத் அத்துகோரள, ரேணுகா பெரேரா, சனத் நிஷாந்த, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட 17 பேருக்கு எதிராக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் அயுஷா ஜினசேன மன்றில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த கோட்டை நீதிவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி "மைனா கோ கம" மற்றும் "கோத்தா கோ கம" மீதான தாக்குதல்களை நடத்துவதற்கான சதி மற்றும் திட்டமிடலுடன் தொடர்பிருக்கலாம் என்று எண்ணுவதால், அவர்கள் நாட்டில் தங்கியிருக்க வேண்டும் என்று தெரிவித்து சட்டமா அதிபரால் இதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதனையடுத்தே குறித்த 17 பேருக்கும் பயணத்தடை விதித்த நீதிமன்றம் அவர்களின் கடவுச்சீட்டையும் முடக்கியுள்ளது.

(அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கறையற்ற கல்வி அதிகாரிகளால் மாணவர்களின் கற்றல் பாதிப்பு

## பெற்றோர் விசனம்

**யாழ்ப்பாணம்,மே 13**

**வடக்கு மாகாணத்தில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதில், மாகாணத்தின் கல்வி அதிகாரிகள் அக்கறையற்றுள்ளனர் என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.**

நாட்டில் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 7 மணிக்கு தளர்த்தப்பட்டதால், பாடசாலைகள் இடம்பெறுமா இல்லையா என்று பெற்றோர் குழப்பமடைந்தனர். இது தொடர்பில் தெளிவுபடுத்த வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் ஊடகங்கள் தொடர்பு கொண்டு கேட்டபோது, பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள் தாங்களாகவே முடிவு எடுத்து பாடசாலைக்கு வருவதற்கான தீர்மானத்தை எடுக்கமுடியும் என்று பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்திருந்தார்.

இந்த நிலையில் வடமாகாண கல்விப் பணிப்பாளருடன் நேற்றுத் தொடர்பு கொண்டு, வடக்கில் உள்ள பாடசாலைகளில் எத்தனை ஆசிரியர்கள், மாணவர்கள் வருகை தந்தனர் என்று கேட்டபோது, அது தொடர்பாக நாங்கள் எவ்வித தகவல்களையும் சேகரிக்கவில்லை என்று அலட்சியமாகப் பதிலளித்தார்.

இந்த நிலையில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தொடர்போராட்டங்களை முன்னெடுத்துள்ள நிலையில், சமூக ஊடகங்களிலும் முரணான தகவல்களே பரிமாறப்படுகின்றன. எனவே கல்வி அதிகாரிகளே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை உரியவாறு மேற்கொள்வதற்கு பொறுப்புடன் செயற்பட வேண்டும். மாற்று நடவடிக்கைகள் குறித்து பெற்றோருக்கும் தெரியப்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை கிழக்கு மாகாணம் மற்றும் மேல் மாகாணத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டமை தொடர்பான அறிவிப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-125)

# சிங்கள மக்களுடன் நல்லுறவை வலுப்படுத்தினால் தீர்வு கிட்டும்

## டக்ளஸ் கண்டுபிடிப்பு

கொழும்பு, மே 13

தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களுடன் தேசிய நல்லிணக்கத்தினையும் நல்லுறவையும் வலுப்படுத்துவதன் மூலமே, பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

உங்களின் உணர்வுகளையும் அதில் இருக்கின்ற நியாயங்களையும் நாங்கள் புரிந்து கொள்ளுகின்றோம். அதற்கு மதிப்பளிக்கின்றோம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டும். மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் களையப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருகின்றது. ஆனால் எத்தகைய பிரச்சினைகளையும் வன்முறைகளுக்கூடாக தீர்க்கமுடியாது என்பதை நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றவர்கள் நாம்.

இதன்காரணமாக புலிகள் எம்மில் பலரை கொலை செய்திருக்கின்றார்கள். என்னைக் கொலை செய்வதற்கு பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். எனினும் தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களுடன் தேசிய நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் வலுப்படுத்துவதன் மூலமே, பிரச்சினைகளை தீர்க்கமுடியும் என்பதை உறுதியுடன் தெரிவித்து வந்துள்ளோம். அதனடிப்படையிலேயே எமது அரசியல் செயற்பாடுகளும், தென்னிலங்கை மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனான எமது உறவும் இருந்து வருகின்றது. இந்த அணுகுமுறையினையே உங்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். வன்முறைகள் ஊடாக எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது- என்றுள்ளது. (ம-20)

# ட்ரம்ப் ருவிற்றர் தடை நீக்கப்படுகின்றது

## எலான் மஸ்க் அறிவிப்பு

வொஷிங்டன், மே 13

டொனால்ட் ட்ரம்ப் மீதான ருவிற்றர் தடையைத் திரும்பப் பெறுவதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ருவிற்றர் கணக்குக்கு கடந்த ஆண்டு ஜனவரியில் தடைவிதிக்கப்பட் டது. ட்ரம்ப் தனது ருவிற்றர் கணக்கு மூலம் கிளர்ச்சியைத் தூண்டியதாகக் குற்றம்சாட்டி அவரது ருவிற்றர் கணக்குக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில் ருவிற்றர் நிறுவனத்தை வாங்கிய எலான் மஸ்க், டொனால்ட் ட்ரம்ப்பின் ருவிற்றர் கணக்குத் தடை திரும்பப் பெறப்படும் என அறிவித்துள்ளார்.

மேலும் "டொனால்ட் ட்ரம்பின் கணக்கு தடை செய்யப்பட்டது ருவிற்றரின் தார்மீக ரீதியான மோசமான முடிவு.

ருவிற்றரிலிருந்து ஒருவரை நிரந்தர மாகத் தடை செய்வது என்பது மோசமான யோசனை என மஸ்க் குறிப்பிட் டுள்ளார். (ச-இ)



# சமாதான நீதிவான் பேரவையின் நிர்வாக உறுப்பினர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், மே 13

இலங்கை சமாதான நீதிவான்களின் பேரவையின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி இணைந்த மாவட்டங்களுக்கான நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தனியார் விடுதி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இதில் இணைந்த மாவட்டங்களுக்கான பணிப்பாளராக சத்யகுமாரன் போல் தர்ஷாந், பிரதிப் பணிப்பாளராக மகாலிங்கம் சுலக்சன் மற்றும் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் பொருளாளராகவும் பொறியியலாளர் அந்தோனிப்பிள்ளை ஜஸ்ரின் டென்சிங் ஆகியோர் நியமனம் பெற்றனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை அமைப்பின் தேசிய பணிப்பாளர் மற்றும் தவிசாளர் பஹறத் ஏ மஜீத் வழங்கினார். (ச)



## காணி விற்பனைக்கு

முதலிக்கோயில் வீதி கொக்குவிலில் 2 பரப்பு காணி விற்பனைக்கு. தரகர் தேவையில்லை. K.K.S Road இலிருந்து 100M தூரத்தில் உள்ளது.

தொடர்பு -: 075 856 3848

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ★ A9 வீதியில் இருந்து 150M தூரம்
- ★ லேடன் கொம்பனி பின்புறம்
- ★ நாவற்குழி சந்தியில் இருந்து 500 M தூரம்
- ★ நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- ★ நல்ல சூழல்
- ★ 20 அடி பாதையுடன்

முன் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 7 லட்சம்

பின் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 5 லட்சம்

தொடர்பு:074 043 6673

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 09 . 1933



மறைவு 12 . 05 . 2022

### துரைராசா கனகம்மா

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா கனகம்மா நேற்று (12.05.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா (முன்னாள் பரிசாரகர் - யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்: குடும்பத்தினர்

077 996 5453

# பெண் பத்திரிகையாளர் இஸ்ரேலில் சுட்டுக்கொலை

ஜெருசலேம், மே 13




இஸ்ரேலில் பெண் பத்திரிகையாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இஸ்ரேல்- பாலஸ்தீனம் இடையே பல ஆண்டுகளாகப் பகைமை நிலவுகிறது. மேற்குக்கரைப் பகுதி மற்றும் ஜெருசலேம் நகரம் யாருக்கு சொந்தம் என்பதில் இருநாடுகளுக்கும் இடையில் மோதல் நீடித்து வருகின்றது.

இந்த நிலையில் மேற்குக்கரைப் பகுதியில் பாலஸ்தீன அகதிகள் முகாமுக்குள் நேற்றுமுன்தினம் காலை இஸ்ரேல் இராணுவத்தினர் அதிரடியாக நுழைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அதன்போது 'அல் ஜசிரா' செய்தி தொலைக்காட்சியின் பெண் பத்திரிகையாளரான ஷிரீன் அபு அக்லே சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் ஒரு பத்திரிகையாளர் படுகாயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.